# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VIII { ராக்ஷஸஹு தைமீ : 1916-ஹு பிப்ரவரிமீ } பகுதி 8

## பழமொழிப் போதம்

### PROVERBS EXPLAINED

காமியகன் மத்தைகெடுக் காலம் விதிமுறையால்
தாமியற்றின் எண்ணர் தனதுபல—னுமிடைந்து
புல்லுகனு வொத்தழியும் பொன்னு டுறுதல்'மலை
கல்லி யெலிகவர்தல்' காண். (40)

'எரியும் ஞெகிழிகளின் எஞ்ஞெகிழி நன்றாம்'
விரியுணர்வைப் போக்கும் விடயத்—திரளவற்றின்
எவ்விடயஞ் சாந்திதனை யீயும் நிருவிடய
செவ்வியதாம் ஞானமலாதே. (41)

தன்கருத்துத் தனித்து நிகழ்வுற
நன்குணர்ந்திடின் ஞான சுகமதா
யுன்சொரூப முனக்கு விளங்குறும்
'முன்கை நீளின் முழங்கையும் நீளுமால்'. (42)

'ஆமாம் விலாங்குகாண் அன்றன்று சர்ப்பமே'
சேமானு போகஞ் செயவுலகம்—யாமாள்வோம்
என்றுழந்தா ரேபருவத் திவ்வுலகு தோற்றமியான்
நின்றுணர்மெய் யின்பமெனும் நேர்ந்து. (43)

'ஆமாம் அரவேயன் றன்று விலாங்கே' காண்
யாமா வதுசிவ னென்றிசைந்து—தாமாழ்கும்
அன்னோர் விசாரவுணர் வான்மெய்ச் சிவமென்று
தன்னோர்வா ரேபருவத் தால். (44)

'உப்பி ருந்திடத் டருப்பிரா டருப்புறில் உப்பின்'
திப்பர் முத்திவேட் புறிற்பிற சாதன மியலா
எப்பில் மற்றசா தனமுறில் முத்திவேட் பிலதால்
ஒப்பு மீச்சுர கருணையாம் பாக்கியம் உறுர்க்கே. (45)

வில்லார் நித்தியா நித்த விவேகம் வைராக் கியஞ் சாந்தம்; புல்லா நின்றும் வீட்டினவாப் பொருந்தா ரெங்ஙன் மனனமதில்; வல்லா ராகி வீடடைவர் மனனம் முமுட்சு செயலன்றே; 'எல்லா முளது பெட்டகத்தே யிலையூண் செய்யக் கலமிலதே'. (46)

'நூற்றைக் கெடுத்தது குறுணி' ஆற்றற் குணத்திரளதிகம், ஏற்றுப் பினர்ச்சில விழிவும்', ஊற்றத் துறிற்புக ழுளதோ. (47)

நிவா சனைவசத்தே செல்லு முயிர்களிடத்
தோவா வுபேட்சை யுறுதுவெறுத்—தாவாதஞ்
சித்தத்தில் அன்னோர் செயிரேற் பது'கல்லைக்
குத்திக்கை நோவார் குணம்' (48)

'இலங்க ணம்பர மௌடத' மென்றல்
பலங்கு றைந்துவிட் சேபநோய் பாறப்
புலங்க ளின்வழிப் புகாவகை நிராசை
கலந்த னெஞ்சகம் நண்ணுவ தன்றே. (49)

'உண்ணுநூர் சுற்றிடினும் உடுக்காம லொருவீடும்
நண்ணுதே' யருட்குருவால் ஞானநிலை யுணராமல்
கண்ணுய பலநூல்கள் கண்டிடினும் அடக்கமுளத்
தண்ணுது பரஞானி யகமடைத லழகன்றே. (50)

'விளைநற் பயிரோ, முளையிற் றெரியும்'
வளமுத் தியைமே, வுளமற் புதமே, (51)

'தானடங்குங் காலைத் தனது குலமடங்கும்'
மீனமனம் சாந்தி பெறுமாகில்—ஞான
கருமவகை யிந்தியங்கள் காயம் பிராணன்
சருவமுமே சாந்தியுறுந் தான். (52)

# ராக்ஷஸஹு பங்குனிமீ CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | ஆங் | இங் | தமிழ் | வார | ராக்ஷஸஹு பங்குனிமு { சாலிசகம் 1837 கலியப்தம் 5016 { 1325 கொல்லம்-1091 { ஹிஜரி 1334 { 1916ஹு மார்ச்சுமீ ஏப்பிரல்மு |
|---|---|---|---|---|---|
| ர | 8 | 13 | 1 | திங் | நவ 26-8, திரு 35-22, ஸௌ 49-26, கௌ 26-8, தியா 0-0, அக 29-47, மீனரவி 18-48, கும்ப சுக்ல நவமிதிதி ஷடசீதி காரடையான் நோன்பு சூன்யார்கம். |
| புசு | 9 | 14 | 2 | செ | தச 31-0, புன 41-35, சோ 50-33, தை 31-0, திவி 8-28, சத 3 புத 33-0, அசு 4 சுக் 25-30, மீன சுக்ல தசமிதிதி |
| பு | 10 | 15 | 3 | புத | ஏகா 35-26, பூச 47-12, அதி 51-9, வணி 3-13, திவி 3-27, பிரகஸ்தபுத 10-38, சர்வ ஏகா மழை 3-க்குள். |
| ரபு | 11 | 16 | 4 | வியா | துவா 39-1, ஆயி 51-59, சுக 51-4, பவ 7-13, திவி 21-45, உத் 1 ரவி 39-38, சத 4 புத 30-0. |
| சு | 12 | 17 | 5 | வெ | திர 41-27, மக 55-37, திரு 50-3, கௌ 10-44, திவி 23-48, அக 29-54, பர 1 சுக் 15-20, பிரதோ. |
| பு | 13 | 18 | 6 | சனி | சது 42-34, பூர 57-57, சூல 47-59, கர 12-0, திவி 16-24, பூரட் 1 புத 21-23, கரிநாள். |
|  | 14 | 19 | 7 | ஞா | ◯ பௌ 42-27, உத்தி 59-7, கண் 44-59, பத் 12-30, திவி 16-48, காமதகனம் பிரம்மஸா ம பங்குனி உத்திரம். |
| ரபுசு | 15 | 20 | 8 | திங் | பிர 41-5, அஸ் 59-3, விர் 41-0, பா 11-46, திவி 20-6, பால்குணபகு உத்தி 2 ரவி 0-18, பூரட் 2 புத 12-49, பர 2 |
|  | 16 | 21 | 9 | செ | துதி 38-30, சித் 57-47, திரு 36-5, தை 9-47, திவி 18-38, அக 30-4, மேஷாய 32-4 [சுக் 10-30, இஷ்டி வஸந்தாதி. |
| குபு | 17 | 22 | 10 | புத | திரு 34-55, சுவா 55-39, வியா 30-23, வணி 6-42, திவி 11-17, பூரட் 3 புத 4-10, சங் சது கல்பாதி பச்சாதஸ்தம் குரு |
| ரபுசு | 18 | 23 | 11 | வியா | சது 30-34, வியா 52-47, ஹர் 24-3, பவ 2-44, திவி 9-59, உத் 3 ரவி 21-51, மீனபு 55-25, பர 3 சுக் 2-50. [58-38. |
|  | 19 | 24 | 12 | வெ | பஞ் 25-32, அனு 49-18, வஜ் 17-10, தை 25-32, திவி 2-12, பஞ்சமிதிதி மழை 9-க்குள். |
| புசு | 20 | 25 | 13 | சனி | சஷ் 19-58, கேட் 45-21, வரீ 9-50, வணி 19-58, திவி 2-23, அக 30-10, உத்தி 1 புத 42-0, பர 4 சுக் 55-36, திதித்வயம் விய சிரா. [அஷ்டமிதிதி காளாஷ்டமி திஸ்ரோஷ்டகா. |
| குர | 21 | 26 | 14 | ஞா | சப் 14-6, மூல 41-16 விய 2-12, வரி 52-17, பவ 14-6, திவி 3-59, ரா 7-6, உத்தி 4 ரவி 43-30, ரே 1 குரு 7-40, |
| பு | 22 | 27 | 15 | திங் | அஷ் 8-10, பூரா 37-13, பரி 46-48, கௌ 8-10, திவி 3-39, ரா 25-42, உத்தி 2 புத 28-0, கரிநாள். |
| செசு | 23 | 28 | 16 | செ | நவ 2-20, சுச 54-25, உத்தி 33-23, சிவ 39-23, கர 2-20, ரா 12-32, செவ்வாவக்ர நிவர்த்தி 2-38, கார் 1 சுக் 48-40. [ ஏகா சிர உப கரிநாள் |
| பு | 24 | 29 | 17 | புத | ஏகா 51-26, திரு 29-55, சித் 32-16, பவ 24-5, ரா 9-8 அக 30-18, உத் 3 புத 14-0, ஸ்மா |
| ரபு | 25 | 30 | 18 | வியா | துவா 47-15, அவி 27-4, சா 25-39, சௌ 19-20, ரா 14-7, ரேவ 1 ரவி, 5-29, உத்தி 4 புத 60-0, வை ஏகா. [ணமதிகரிக்கும் சிவவிடங்களில். |
| சு | 26 | 31 | 19 | வெ | திர 43-39, சத 24-58, சுப 19-39, கர 15-27, ரா 10-19, ரிஷபசுக் 46-25, பிரதோ மாசி உஷ் |
| பு | 27 | 1 | 20 | சனி | சது 41-7, பூரட் 23-48, சுப் 49-23, பத் 12-23, ரா 17-25, ரே 1 புத 47-0, மழை 4-க்குள். |
| ர | 28 | 2 | 21 | ஞா | ● அமா 39-43, உத்தி 23-46, பிரா 10-1, சது 10-25, ரா 23-58, அக 30-24, ரேவ 2 ரவி 28-27, சர்வ அமா ருத்திரஸா ம. [3 சுக் 49-30, இஷ்டி சாந்திரவருஷம் வை சிரா. |
| புசு | 29 | 3 | 22 | திங் | பிர 39-36, ரே 24-57, மா 6-39, கிம் 9-39, தியா 0-0, சைத்திரசுத்த ரே 2 புத 36-0, கார் |
|  | 30 | 4 | 23 | செ | துதி 40-35, அசு 27-13, வை 4-5, பர் 10-5, திவி 16-50, ரா 22-9, சங் ருசி. [பாக்ய கௌரீ. |
| ரபு | 1 | 5 | 24 | புத | திரு 42-56, பர 30-49, விஷ் 2-38, தை 11-45, தியா 0-0, ரே 3 ரவி 51-25, ரே 3 புத 25-0, உத்தமஸா ம ஸௌ |
| சு | 2 | 6 | 25 | வியா | சது 46-22, ✳ கார் 35-31, பிரி 2-10, வணி 14-39, திவி 3-10, அக 30-30, கார் 4 சுக் 50-40, சது விரு கார் உப சக்தி கணபதி விரு. [59-24, ரே 4 புத 13-0, கல்பாதி மத்ஸ்ய ஜ. |
| செபு | 3 | 7 | 26 | வெ | பஞ் 50-44, ரோ 41-8, ஆயு 2-31, பவ 18-33, திவி 19-16, ரா 23-6, ஆயி 1 ரிசசெ [விரு ரே 2 குரு 51-0 |
|  | 4 | 8 | 27 | சனி | சஷ் 55-34, மிரு 47-17, ஸௌ 3-31, கௌ 23-9 சே 0-34, சஷ் உப மழை 5-க்குள். [சந்தான சப்தமி- |
| குரபு | 5 | 9 | 28 | ஞா | சப் 60-0, திரு 53-45, சோ 4-48, கர 27-47, திவி 10-33, ரேவ 4 ரவி 15-29, மேஷபுத 2-30, ரோ 1 சுக் 51-30,- |
| சு] பு | 6 | 10 | 29 | திங் | சப் 0-42, புன 60-0, அதி 6-16, வணி 0-42, திவி 26-54, அசு 30-35, அசு 2 புத 60-0, அசோகாஷ்டமி. |
|  | 7 | 11 | 30 | செ | அஷ் 5-35, புன 0-3, சுக 7-32, பவ 5-35, திவி 21-59! மீன சுக்ல நவமிதிதி ஸ்ரீராமநவமி |
| ரபுசு | 8 | 12 | 31 | புத | நவ 9-55, பூச 5-50, திரு 8-23, கர 9-55, ரா 9-52, மேஷரவி 39-9, அசு 3 புத 56-25, ரோ 2 சுக் 56-40: குன்ய திதி சித்திரவிஷு சௌரவருஷப்பண்டிகை. |

(Marginal notes in columns: "இஷ" beside Tamil dates 4–6; "ஏப்பிரல்" beside dates 1–5 of the இங் column; "ஜமாதிலாகர்" beside dates 1–6 of the ஆங் column.)

| ர குரு | சுக் | | சனி |
|---|---|---|---|
| புத | 11 மீன பு<br>19 ரிஷ சு<br>28 மே பு | | கே செ |
| ரா | | | |
|  | | | |

# விவேக போதினி

தொ.8] ராக்ஷஸஹு: தைமீ [பகுதி.8

## மோக்ஷ ஸோபாநம்

### THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

### 7. ஜீவன் : தேஹம்: அவஸ்தை

முன்னர் எடுத்தாராய்ந்தவைகளிலிருந்து, ஸந்மார்க்க முயற்சி காலங்களில் ஸகுணனாகவே தோன்றி, இவைகளின் முடிவான மோக்ஷநிலையில் நிர்குணனாக மாத்ரம் தான் உள்ளபடி, தான்மாத்திரமாக எல்லாவற்றையும் விழுங்கி நிற்கும் ஈச்வரனை வழிபட்டு, உள்ளது உள்ளபடி ஆகிவிடுவதே எல்லா ஜீவராசிகளது முடிவான நிலை என்பது நன்கு விளங்கியிருக்கும். இந்நிலையை அடைவதற்கே எல்லா உயிர்ப்பிராணிகளும் அறியாமலும், சில பெரியோர்கள் நன்கு உணர்ந்தும் தொழிற்படுகின்றனர். பொதுவாகஜீவர்களுக்கு இந்த நோக்கத்தின் விளக்கமே இல்லாததாலே குருட்டுத்தனமான முயற்சியால் அவர்கள் எல்லோரும் புண்யபாபங்களில் மூழ்ந்து விஷயஸுக மயக்கத்தால் பெரும்பாலும் பாபங்களுக்கு ஆளாகி பெருந்துக்கங்களை அனுபவிக்க வேண்டி வருகின்றது. பெரியோர்களோ முயற்சி ஒழுங்கால், வரவர பாபங்களிலிருந்து விடுபட்டு, புண்யபலப்பற்றும் நீங்கப் பெற்று மோக்ஷநிலையை நோக்கி அணுகிப் போவர். இப்படி ஏற்படும் முயற்சி விசேஷங்களால் ஜீவராசிகளுக்கு உண்டாகும்நிலை விசேஷங்களை எடுத்து ஆராயப்புகுவோம்.

எல்லா ஜீவராசிகள் விஷயத்தையும்விட மானிடர் விஷயமே நமக்கு முக்கியம்: அதை எடுத்து ஆராய்வோம். எந்த உயிர்ப்ராணியை எடுத்துக்கொண்டாலும் அதன் தேஹமே நமக்கு எளிதில் எதிரிடையாக விளங்கும். இதை ஆராய்ந்துபார்த்தால் மச்சை, மேதஸ், அஸ்தி, மாம்ஸம், ரக்தம், சர்மம், சுக்லம், ஆகிய இவ்வேழுவஸ்துக்களாலாக்கப்பட்டுத் தலை, கால், தொடை, முதுகு, மார்பு, கை, கழுத்து ஆகிய ஏழு அங்கங்களுடன் அமைந்து காணப்படும். இதற்கே ஸ்தூலதேஹம் என்று பெயர். இதில் ஒழுங்கான தொழில்கள் நடைபெறுவது நமக்கு வெளிப்படையாதலால் இதில் ஜீவன் அல்லது உயிர் இருந்து வேலை செய்கிறது என்று தெரியவருகிறது. மரண காலத்தில் தேஹம் இருந்தும் ஒன்றும் நடைபெறத்தகாது வெறும் கட்டைக்கு நிகராக தேஹம் ஆகிவிடுவதாலும், தூக்ககாலத்தில் இதைப்போல செயலற்றிருப்பினும் மறுபடி தொழிற்பாடு ஏற்பட இடம் இருப்பதாலும், இத்தொழில்களுக்கு எல்லாம் ஆதாரமான ஜீவன் அல்லது உயிர் இந்த ஸ்தூல தேஹத்தை விட்டு வேறானதாக இருத்தல் வேண்டும்: அதன் இயற்கையால் தேஹத்திற்குத் தொழிற்படும் தன்மை ஏற்படுகிறது: ஆதலால் தொழிற்பாடு, தேஹத்தின் இயற்கையல்ல செயற்கையே, பானகத்தின் தித்திப்புபோல: என்பவை தெரியவரும். இந்த ஸ்தூலதேஹம் அசுத்தமானது; துக்கக்களஞ்சியம்; அநித்யம். ஜீவன் தொழிற்பாட்டிற்கு இது கருவியாக இருப்பதால், இதன் குற்றங்களால் மோக்ஷ முயற்சிக்கு

யாதொரு கேடும் வாராதிருக்கவே ஈசன் சாஸ்திரங்கள் வழி சௌசாதி காயிககர்ம ஒழுங்குகளைவெளியிட்டிருக்கிருர். வர்ணுச்ரம தர்மத்தைப்பற்றி விவரிக்குங்கால் இதை ப்பற்றி எடுத்து நன்கு ஆராய்வோம். இந்த ஒழுங்குகளுக்குள் அடங்காது வேறு வழியாகக் குறைவாகவோ அல்லது அதிக மாகவோ ஸ்தூலதேஹத்தை நடத்திவந் தால், தேஹத்திற்குக் கேடுகளும், அல்லது தேஹவிஷயம் மோக்ஷ விஷயத்திற்கு நேர் தடையாகவும் வந்து, வாழ்க்கை நோக் கம் கைகூட இடமில்லாமலே போய்விடும். நாகரீகமற்ற காட்டு முராண்டி ஜனங்கள், சாஸ்திர விஷயங்களுக்குக் குறைவாக நடந்து மோக்ஷ வழியை நாடமுடியாமலிருப் பர். நாகரீகம் மிகுந்த வேதபாக்கியர்களோ, சாஸ்திர ஒழுங்குக்கு மேற்பட்ட கவலையை ஸ்தூலதேஹ விஷயத்தில் எடுத்துக் கொண்டு, வீணுக மனங்கலங்கி மோக்ஷ வழி விளங்கியும் அதை அணுகமுடியாது தத்தளிப்பர். இந்த ஸ்தூலதேஹத்தில் தொழிற்பட்டு மேற் கூறப்போகும் இரண்டு வித தேஹத் தொழில்களையும் ஸ்தூலத் தின் வழி வெளிப்படுத்திக்கொண்டிருக்கும் ஸாதாரண விழிப்பு உலக வ்யவகார நிலைக்கு ஜாக்ரத் அவஸ்தை என்று பெயர். இந்நிலை, ஈச்வரன்ஸ்ருஷ்டியாகிய மாருது ஒருபடித் தாக எல்லோருக்கும் இருக்கும் தன்மையு டைய வெளி ப்ரபஞ்சத்தில்தான்; மற்றைய தேஹ தொழிற்பாடான தன் ஸ்ருஷ்டி யையும் கலந்து குழப்பிக்கொண்டு தொழிற் படுவன் ஜீவன். இப்படி விழிப்புக்காலம் எல்லாவற்றிற்கும் ஜாக்ரத் என்ற பெயர் பொருந்துமாயினும், இதில் மோக்ஷமார்க் கத்தை ஒழுங்காக நாடுவதற்கு ஏற்பட் டுள்ள ஈச்ன் கட்டளைகளான வேதசாஸ்திர ஏற்பாடுகளின்படி கர்மானுஷ்டான, ஸ்வ தர்மானுஷ்டானங்கள் செய்யும் காலங் களுக்கே வைதிகஜாக்ரத் என்று பெயர். மற்றைய தொழிற்படுங்காலங்கள் எல்லாம் மூடஜாக்ரத்தே தானுகும். இதற்கு ஸ்தானம் மூளை (புருவமத்தி). இந்தக் காலத்தில் ஈசன் அவன் கட்டளைகள் மூலமாகவே பெரிய யஜமானனுக உணரப்பட்டு, அவன் கட்டளைப்படி நடப்பதாகிய கர்மானுஷ்டா னத்தாலேயே பற்றப்படுவனுதலின், அவன் எங்கும் நிறைந்து நமது தொழில் ஒழுங்குகளை பார்த்திருப்பவனுகிய விராட்டாகக் கருதப்படு வன். இந்த நிலையில் அவனுக்குக்கீழ்படிந்து நடக்கும் ஜீவனுக்கு விச்வன், ப்ரபஞ்சத்தை யும் உணருபவன் என்ற பெயர் ஏற்படும். முற்கூறிய ஜாக்ரத் பேதப்படி விராட் தன்மை உணருதல், உணரப்படாமை என்ற பேதத்தால் விச்வனும், வைதிகவிச்வன் மூடவிச்வன், என்ற பாகுபாடுடன் இருப் பன். இந்த நிலையில் ஈச்வரனுக்கும் ஜீவனுக் கும் ஆண்டானடிமை ஸம்பந்தமே.

ஜீவன் ஸ்தூலதேஹத்தில் தொழிற் படும் வழியை நன்கு விசாரித்துப்பார்த் தால் சிற்சில பாகங்கள் வழியே சிற்சில வேலைகளைச் செய்கிருன் என்பது வெளியா கும். அதாவது கண்ணுல் பார்ப்பன்; வாயால் பேசுவன்; மூக்கால் மூச்சிழுத்து வாங்குவன்; உள்ளுக்குள்ளேயே விஷயங்களைப் பார்த் தும் ஆராய்வன் இவைபோன்ற பல காரி யங்களைச் செய்வன். இதனுல் காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்ற ஐந்து ஞானேந் திரியங்கள் வழி வெளி உலகை, ஓசை, தொடு தல், உருவம், சுவை, நாற்றம் இவைகளாக உணருவன் என்பதும், வாய், கை, கால், குதம், குறி ஆகிய ஐந்து கர்மேந்திரியங்கள் வழி, பேசல், எடுத்தல் நடத்தல், மலஜலங்

கழித்தல், ஆனந்தத்தில் இவ்வைந்து தொழில்களைச் செய்வன் என்பதும்; தன் ஸம்பந்தமில்லாமலே இயற்கைபோல, மூச்சு விடல், மலஜலம் தள்ளுதல், சதைகள் அசைவு, எல்லாம்அடக்கி லோகாந்தரம் போவது தலைஅசைவு முதலியவைகளைச் செய்தல் அன்னரஸம் பரவச்செய்தல் ஆகிய இவைகளை மார்பு,தொப்புளுக்குக் கிழ்ப்பாம், தேஹம்,தலை, வயிறு இவைகள் வழி நடத்தும் ப்ராண, அபான, வ்யான, உதான, ஸமானன் என்ற ஐந்துவாயுக்களால் நடக்கின்றன என்பதும்; ஞானேந்திரியாதிகளால் உணரப்படுபவைகளை எதிரிட்டு உள்ளேயே உணர அவைகளுடன் உழன்று திரிந்தும், அவைகளைப்பற்றி அடிக்கடிக் கருதி அவைகள் விஷயமான தொழில்களைக் கர்மேந்திரிய வழி நடத்த ஆதாரமாகவும் இருக்கும் மனம், இவ்விஷயங்களை ஆராய்ந்து தீர்மானித்தும், அபிமானித்தும் நிற்கும் புத்தி இவைகளாகிய இரண்டுவிதமான அந்தஃகரண மாகவிருந்து தகுந்த தொழில்கள் முறையே ஹ்ருதயம், மூளை இவைகள் வழி நடைபெறுகின்றன என்பதும், வெளியாகும். இங்கு காட்டப்பட்ட 17-இன் கூட்டத்திற்கு ஸூக்ஷ்மதேஹம் என்று பெயர். இது ஸ்தூலத்தை விட்டு வேறானது என்பது தூக்கநிலையைக் கருதினாலும், ஸ்வப்னநிலையைக் கருதினாலும் விளங்கும். ஸ்வப்நத்தில் கண்ணில்லாமல் பார்க்க்வில்லையா? இதுபோல முற்கூறிய அங்க ஸம்பந்தமின்றித் தொழில் நடக்கவில்லையா? ஆனால் ஸ்தூலஸம்பந்தமே இன்றி ஸூக்ஷ்மம் சேஷ்டிக்கவே மாட்டாது. இந்த ஸூக்ஷ்ம தேஹம் வெறும் பற்பல சக்திகளாலாகியது தான், இது தொழிற்பட ஸ்தூல ஆதாரம் வேண்டும். இதுபற்றித் தான் ஸூக்ஷ்ம சக்திகள் தொழிற்பட ஸ்தூலதேகத்தில் முன்னர் குறிப்பிட்டபடி அங்கங்களும் உள்ளன. ஸ்தூல சரீர ஸம்பந்தத்தை ஒருவாறுகக் கொண்டு பெரும்பாலும் ஸூக்ஷ்ம சரீரத்திலும் மேற்கூறப்போகும் சரீரத்திலும் இருந்து, வெளி விஷய எதிர்ப்பாடு இல்லாது அவைகளில் ஏற்பட்ட பழக்க விசேஷப்பதிவுகள் மாத்திரத்தில் விஷய ஸுகதுக்கங்களை மனமாத்திரமாக நேரில் அனுபவிப்பதுபோல அனுபவிக்கும் கனவுநிலைக்கு ஸ்வப்ந அவஸ்தை என்று பெயர். இந்நிலையில் ஈச்வரஸ்ருஷ்டியைப் பெரும்பாலும் விட்டு விலகிக் கேவலம் தன் மனோராஜ்ய ப்ரபஞ்சமாத்திரத்தில் மாத்திரம் உழலுவன் ஜீவன். இம்மாதிரியே ஜாக்ரத் அவஸ்தையிலும் ஜீவன் ஸ்வப்நம் போன்ற அவஸ்தையிலிருப்பதுண்டு. சாஸ்திரங்களில் இந்த ஸ்வப்நாவஸ்தையை நன்கு வர்ணித்து இதில் ஜீவன் நிலையை விளக்கிக்காட்டுவதெல்லாம், தன் முயற்சியின்றி தானே வந்து மூடி ஜீவனை அழுத்திவிடும் ஸ்வப்ந நிலைபோன்ற கேவலம் மனோராஜ்ய நிலைகளை ஜாக்ரத்வஸ்தையில், தன் முயற்சியாலேயே ஜீவன் ஏற்படுத்திக்கொண்டு, ஈச்வர ஸ்ருஷ்டியை ஆதாரமாகக்கொண்டு அதனுடன் தன் கொடிய மானஸிருஷ்டி கிடந்து குழம்பாது பிரித்து அடக்கி, அதற்கு இசைந்ததான தன் நல்ல ஜீவசிருஷ்டிகள் எப்பொழுதும் பொருந்தி சிறந்த ஸுகம் தரப் பழகுவதான த்யான நிலைகளை விருத்தி செய்வதற்கே. ஊன்றி மனோராஜ்யம் செய்வதான தொழிலாளி, தொழிலையே எண்ணியும், வ்யாபாரி வ்யாபாரத்தையே எண்ணியும், மாணுக்கன் பாடங்களையே எண்ணியும், சாஸ்திரிகள் சாஸ்த்ரங்களையே எண்ணியும், பக்தன் கடவுளையே கருதியும், மற்

றைய வெளி விஷயங்களைக் கருதாமலே நின்றுவிடும் ஸமயங்கள் எல்லாம் ஜாக்ரத்தில் ஸ்வப்நாவஸ்தைகளே. இவைகளில் கடைசி விஷயம் மாத்திரம் வைதிக ஸ்வப்நம்; தூக்கஸ்வப்நம் உள்பட மற்றவைகள் எல்லாம் மூடஸ்வப்நம். இதற்கு ஸ்தானம் சிறு மூளை, கண்டஸ்தானம். இந்த த்யானவஸரத்தில் ஈச்வரன் ஹிரண்யகர்பனாகக் கருதப்படுவன். இதில் இந்த ஈச்வர ரூபத்தையே இசைந்த விஷய உணர்வுடன் த்யானித்து ஈடுபடும் ஜீவனுக்குத் தைஜஸன் (மன உணர்வு ஒளிமாத்திரமாய் இருப்பவன்) என்று பெயர். முற்கூறிய ஹிரண்ய கர்ப்பத்தன்மை உணரப்படுதல் உணரப்படாமை என்ற பேதத்தால் தைஜஸனும், வைதிகன் மூடன் என்ற பாகுபாடுடனிருப்பன். இந்நிலையில் ஜீவனுக்கும் ஈசனுக்கும் த்யானபலத்தால் அங்க அங்கிபாகம் ஏற்பட்டுக்கொண்டு வந்து, ஈசனன்றி தனக்குத் தனி இருப்பில்லை என்ற உணர்வு திடப்பட்டுக்கொண்டே வரும். இம்மாதிரியான வைதிக ஸ்வப்நத்தில்தான் ஈச்வர ப்ரத்யக்ஷங்களாகி ஜாக்ரத்தில் பயன்பட்டு கிற்பது. மூடஸ்வப்நத் தோற்றங்கள் வெறும் தோற்றமாத்திரந்தான், பயன்படா.

இனி இந்தஸ்வப்நத்திற்கும் அப்பாற்பட்டதான மூன்றாவது நிலை நம் அனுபவத்திலேயே இருக்கிறது; அதையும் நம் முயற்சியின்றி நம்மைக் கவியும்படி விடாது வைதிக முயற்சியால் கைகூடி நிலைக்கும்படி நாம் செய்யவேண்டும். இதற்கு ஸுஷுப்தி அவஸ்தை என்று பெயர். இது நமக்கு ஒவ்வொரு தினமும் ஸ்வப்நம் கூடஇல்லாது ஓய்ந்து தூங்கும் போதும், ஸுகானுபவங்களில் மூழ்கும்போது ஜாக்ரதாவஸ்தையிலும் ஏற்படும். இதில் வெளிவஸ்து இன்மையான சூந்ய திருஷ்டியும், ஒருவாறு மங்கலான ஸுகானுபவ உணர்வுமேதான் ஏற்றமாக நிற்கும். இதனால் இங்கும் ஜீவனில்லாமல் போய்விடவில்லை, அவன் உணர்வுமாத்திரமாக இருக்கிறான்; ஆனால் உணரப்படும் பொருள்கள் எல்லாம் மறைபட்டுவிட்டன. மறுபடியும் வெளிப்படும் தன்மையுடன் கூட விதையுள் செடிபோன்ற நிலையில் மறைந்துள்ளன. இந்நிலையைவைதிகஸ்வப்நாவஸ்தையாகிய த்யானத்திலிருந்து மனப்பூர்வ அப்யாஸத்தால் ஸமாதிபழகி வருவித்துக்கொண்டால் இதற்கு வைதிக ஸுஷுப்தி என்றும் மற்றையஸுஷுப்தி எல்லாம் மூடஸுஷுப்தி என்றும்பெயரிட்டழைப்பர் பெரியோர். இந்த ஸமாதி நிலை நன்கு விளங்கி ஜீவன் மனப்பூர்வமாக அதில் நிலைப்பதற்கே நமது சாஸ்திரங்களில் ஸுஷுப்தி அவஸ்தை நன்கு வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அறியாமை நீங்கி, அறிபடுபொருளான ஈச்வரனிடம் மனம் நிலைத்து அது மாத்திரமாக தன்னையும் த்யானத்தையும் மறந்த தெளிவான ஸுகானுபவத்துடன் ஜீவன் இருப்பன். இவ்வுணர்வு இந்த ஸமாதி கலைந்து எழுந்திருக்குங்காலும் விடாது தொடர்ந்திருப்பதால் மாத்திரமே இப்படிப்பட்டது என்று ஸுஷுப்தி விஷயத்தில் ஊஹிக்கப்படுவதுபோல ஊஹிக்கப்படும். இங்கு உணருபவனான ஜீவன் உணரப்படும்பொருளான ஈசன் மாத்திரமாக இருப்பதால் இவனுக்கு ப்ராஞ்ஞன் என்ற பெயரும், பரவஸ்துவுக்குத்தான் ஸகுணநாமமான ஈச்வரன் என்ற பெயரும் இடப்பட்டுள்ளன. இந்நிலையில் ஜீவனுக்கு ஈச்வரனுடன் பேதம் மறையக்கலத்தலாகிய பொருத்தம் உண்டு. ஈச்வரத்தன்மை இரண்டற உணரப்படுதல் படாமைக்கேற்ப ப்ராஞ்ஞனும், வைதிகன்

மூடன் என இருவகைப்படுவன். இந்நிலையில் ஜீவனிருந்து தொழிற்படும் ஸ்தானம் ஹ்ருதய கமலமே. இதிலிருந்தே எல்லாம் வெளிப்பட்டு ஒடுங்குவதாகத் தோற்றுவதால் இதற்குக் காரணசரீரம் என்று பெயர்.

முன்காட்டப்பட்ட மூன்று சரீர அவஸ்தைகளை நன்கு கவனித்தால், ஜாக்ரதாவஸ்தையில் பல்வகைப்பட்ட தேசகால நிமித்த ஒழுங்கான வெளிவிஷய அறிவு, உணர்வு, உருக்கம், ஊக்கம் இவைகளுடன் பொருந்தி நிற்கிறது என்றும், ஸ்வப்நாவஸ்தை பல்வகைப்பட்ட ஒழுங்கு தவறி காலநிமித்த மாத்திரத்தில் வெளிவிஷயம் போன்ற தன் அறிவு உருக்கம் ஊக்கமாத்ரமாக நிற்கிறதென்றும், ஸுஷுப்தி அவஸ்தையில் வெளிவிஷயம் மறைந்து கேவலம் நிமித்த மாத்திரமாகி அறிபடுபொருளில்லா வெறும் தன்னறிவு மாத்திரமாக மிஞ்சி நிற்கிறது என்றும் வெளியாயிருக்கும். இவைகளை வைதிக ஒழுங்குபடி சீர்திருத்தி ஜாக்ரதாவஸ்தையிலேயே நிலைக்கும்படி செய்வதற்கு முறையே கர்மானுஷ்டான விராட் விச்வ ஆண்டானடிமைப் பொருத்தமான அங்காவபத்த உபாஸனை, த்யான ஹிரண்யகர்ப தைஜஸஅங்க அங்கிப் பொருத்தமானப்ரதிகோபாஸனை,ஏகாக்ர ஸமாதி ஈச்வர ப்ராஞ்ஞதாதாத்மியப் பொருத்தமான அகங்கிரஹோபாஸனை ஆகிய இவைகளே தகுந்த வழிகள் என்பதும் விளங்கியிருக்கும்.

இவ்வாறு மூன்று சரீரங்களைப்பூர்வகர்ம வசமாகப்பற்றித் தொழிற்படும் ஜீவர்கள் மனதில் பொதுவாக மூன்றுவிதப்பதிவுகள் எப்பொழுதும் காணப்படும். இவை கர்மங்கள்செய்வதால் ஏற்பட்டுப்பின்னர் கர்மாக்களாகவும், ஸுகதுக்கங்களாகவும் பலிக்கும் தன்மை உடையவை. முன்காட்டியபடி வைதிக அவஸ்தைகளில் ஏற்படும் முயற்சிக்குத் தகுந்த சுத்தப்பதிவுகளுக்கு வித்யை, உபாஸனைப்பதிவுகள் என்று பெயர். இவைமேலான லோகங்களை அடைந்து மேன்மேலும் வைதிகவழிகளில் முயன்று மோக்ஷம் நோக்கித் திடமாகப்போகும்படி ஜீவனைச் செய்யும். பொதுவாக மூன்று அவஸ்தைகளிலும் செய்யப்படும் நல்ல கெட்ட கர்மங்களுக்கு ஏற்ப ஒரே தடவையிலேயே ஸுகதுக்கமாகப் பின்னர்பலிக்கக்கூடியபதிவுகளுக்குக் கர்மா, விதி, ப்ராரப்தமாகும் ஸஞ்சிதம் என்று பெயர். பல தரம் நல்ல கெட்ட கர்மாக்களைச் செய்வதால் இசைந்த ஸந்தர்ப்பங்களில் அவைகளையே செய்யவேண்டும் என்று பின்னர் எழும் பலத்தை உடைய மனப்பதிவுகளுக்கு வாஸனைப்ரகிருதி ஸ்வபாவம் என்று பெயர். ஸாதாரணமாக உலகில் உழலும் ஜீவர்கள் எல்லோருக்கும் கர்மவாஸனைப் பதிவுகள்தான் பெரும்பாலும் இருக்கும். வைதிகவழியில் முயலும் பெரும்பாலார்க்கும் சிறுபான்மை வித்தியாப்பதிவும் இருக்கும். இம்முயற்சியில் தேறிவருபவருக்கு ஸுவாஸனை, ஸத்கர்மா, வித்யாப் பதிவுகள் பலத்து வரும், முன்னிரண்டும் பலிக்கப்பலிக்க மூன்றுவது அதிகப்பட்டுக் கொண்டேவரும். இப்படி பலிக்காத ஸாதாரண ஜீவர்களுக்குப் பொதுவான கர்மவாஸனைப் பதிவுகளாலும், வெகு பலக்குறைவான வித்தியாப் பதிவுகளாலும் க்லேச (அவித்யாதிகள்) கர்ம (ஸஞ்சிதம்) விபாக (ப்ராரப்தம்) ஆசயம் (வாஸனை) இவைகளாகிய நான்குவித பந்தங்கள் கவிந்துகொண்டே இருந்து ஓயாஸுகதுக்க பாபபுண்ய கர்மப்பின்னலுக்கு ஆளாக்கி, இவர்களைப் பிறந்திறந்து திண்டாடச் செய்யும். ஆனல் வித்யைப்பதிவுகள் தகுந்த முயற்சிகளால்

பலப்பட்டுவரும் புண்யாத்மாக்களுக்கோ, ஆசயகர்மங்கள் சுத்தமாக மாத்திரம் மிஞ்சிவிடும், விபாகம் பலித்தாலும் தாக்காது, க்லேசங்கள் வரவர வலுவில் குறைந்துகொண்டேவரும்: மேன்மேலும் சிறந்த பிறவியேஏற்பட்டுத்தயங்காது மோக்ஷம் நோக்கியேபோகும் ஆற்றல் அதிகப்பட்டுக்கொண்டேவரும். இப்படி ஆற்றல் மிகுந்துவரும் மேலான ஸந்யாஸயோக்கியமான ஜீவர்களது பிறவியில் வைதிக அவஸ்தைகளில் நிலைத்து மேல் நிலையை அடைய உதவியாக இருப்பதற்கே மாண்டூக்ய உபநிஷத் என்ற ஸர்வோபநிஷத்ஸாரம் அவஸ்தாநுட்பத்தைக் காட்டி அவைகட்கு இசைந்த ப்ரணவத்யானத்தையும் விதிக்கிறது.

ஒரு ஸாதாரண கர்மா பலித்து முடிந்து, அடுத்த ஸாதாரண கர்மா பலிக்கத்தொடங்குவதற்கு முன் ஏற்படும் இடைவெளிதான் ஸாதாரண ஸுஷுப்தி அவஸ்தை எனப்படுவது. இதில் எல்லாக் கருவிகளும் தொழிற்படும் ஆற்றலிழந்து அவ்வக்கோளகங்களுள் அடங்க மனமும் அதிநுட்பமான சக்தி குன்றியநிலையை அடைந்து ஜீவன் தன்மையும் மழுங்கி இருக்கும் தருணம் இது. இது தன்முயற்சியின்றியும், ஸாதாரணமாயும், பின்வெளிவரக்கூடும் என்ற நம்பிக்கையை முன்னிட்டும், ஒருவிதமான ஸுக உணர்வுடன் ஸம்பந்தப்பட்டும் இருப்பதால் ஸுஷுப்தி பயங்கரமாக நமக்குப் படவில்லை. ஆனால் மரணமும் இதைப்போலவே சிலவிஷயங்களில் இருப்பினும், மற்றும் சில வேற்றுமைத் தன்மைகளில் பயங்கரமாக உள்ளது. ஜாக்ரத் அவஸ்தையில் கோளகங்களிலிருந்து அவைகளில் நடைபெறும் தொழில் திடீரென்று பிரிக்கப்படுவதாலும் மேல் நடப்பது இன்னது என்பது விளங்காமையாலும், முன்பின் ஏற்படாத அனுபவமாதலாலும், மரணம் பயங்கரமாக உள்ளது. இதுபோன்ற பயங்கர அவஸ்தைக்கு உதாரணமாக மூர்ச்சையைஎடுத்துக்கொள்ளலாம். இதில் எல்லோருக்கும் துக்க உணர்வுதான் காணப்படும். இப்படிப்பட்ட மரணாவஸ்தை என்பது ப்ராரப்தகர்மாப்படி ஆயுஸ் (ச்வாஸக்கணக்கு) முடிவில் ஒரு முக்ய ப்ராரப்தத்தைச்சார்ந்த ஸாதாரண கர்மாக்கள் முடிவில் அடுத்த முக்கிய ப்ராரப்தத்தைச்சார்ந்த பலமானகர்மாக்ள் பலிப்பதற்கு முன் ஏற்படும் நிலைமாற்றம். இதன் தொடக்கத்தில் முதலில் கர்மேந்திரியங்கள் தொழிலிழந்து முறையே ப்ராணாதிவாயுக்களிலும் ஞாநேந்திரியங்களிலும் அடங்கி வரும். ஞானேந்திரியங்களிலும் ஒன்றனுள் ஒன்றாகக் காதுவரையில் அடங்கி முடிவில் கண்ணும்தெரியாதுபோய்க் காதுமாத்திரம் கேட்கும் நிலை மாத்திரமாகிவிடும். இத்தருணத்தில்தான் மேல் ஒடுக்கம் முதலிய நிலைகளை உணர்த்தும் கர்ணமந்திரம் உபதேசிப்பது: உறவினர்கள் நண்பர்கள் எல்லோரும் இறப்பவன் காதுகேட்க அவனைத்துதித்து அவனைவிட்டுப் பிரிவதைக்கருதி துக்கிப்பது. இதனால் இறப்பவர்களுக்கு ஒருவிதமான ஆறுதல் ஏற்படும். இதை வரம்புக்கு மிஞ்சிச் செய்து இறப்பவர் மனதை விணாகக் கலக்குவது நியாயமேயல்ல: இதனால் மரண பயம் அதிகமாகுமே ஒழியக் குறையாது. ஸகல சாஸ்திரங்களும் வெறும் மானஸீகமான மரணபயத்தைக் குறைக்கவே முயலுகின்றன. இப்படி இருக்கும் இதை அதிகப்படுத்தத் தொழிற்படுவது எப்படி நியாயமாகும்? பின்னர், காதும் கேட்காமல் போகும். வெறும் மூச்சு மாத்திரம் தடைபட்டு வந்து கொண்டே இருக்கும். இந்நிலையில்

(இதன் தொடர்ச்சி 283-ம் பக்கம்.)

# பெரியோர்

## THE GREAT MEN

ஐம்புலன்களை அடக்கித் துன்பத்தை முற்றுந் தவிர்த்துப் பரம்பொருளைக் காணும் விருப்பத்தோடு, சீவகோடிகளுக்கெல்லாம் பரிந்து, சிற்றின்பத்தை வெறுத்துப் பொருந்திய போகங்களைத் துக்கமுஞ் சந்தோஷமுமின்றி அனுபவித்து, உடம்பைத்தானென்றுந் தன்னதென்றுங் கருதாது, ஓரே நிலையில் நிற்பவர் பெரியோரெனப்படுவார்.

'இக்காலத்திற், பெரியோரால் உலகத்திற்கு யாது பயன்? அவர்களையுஞ் சோம்பேறிக்கூட்டத்தோடுதான் சேர்க்கவேண்டும். அவர்கள் இருப்பதில் இல்லாதது உயர்வு' என்று சொல்லுஞ் சில மதியூகிகளுக்கு, பிரசங்கமேடைகளினின்று வெகு ஆடம்பரத்துடன் பேசி, அதனால் உலகத்தாருக்கு விசேஷ நன்மை உண்டாகிவிட்டதென்று தமக்குள்ளே மட்டில் நினைத்துக் கொண்டு பிறத்தலையு மிறத்தலையுமே பெருந்தொழிலாகக்கொண்ட பெரியோர்களைக் காட்டிலும், "புலியாலே வெருட்டப்பட்டு அதனின்றுந் தப்பித்துக்கொள்ள ஓடிய மனிதன் ஒரு பாழ்ங்கிணற்றுள் விழ,அங்கு பாம்பு நிறைந்திருக்கக்கண்டு, இருபுறமும் போகமுடியாது அங்குள்ள ஓர் அறுகம்புல்லைப்பற்ற, அப்புல்லுங் கனந் தாங்கமாட்டாதுவேரற்றுக் கீழேவிழுந்து பாம்பிற்கிரையாகப் போகுந்தறுவாயில் மேலே கட்டப்பட்டிருந்த கூட்டிலிருந்து ஒருதிவலைத்தேன் அம்மனிதன் வாய்ப்பட, அச்சமயம் அம்மனிதன் அனுபவித்த இன்பத்திற்குச் சமானமான இம்மானுடவின்பத்திற்கு அங்காந்து" பிறந்து, பிறந்து துன்பத்தை அடையவேண்டாம் என்று நற்புத்திகூறும் பெரியோரா உலகிற்குப் பயன் பெருதவர் என்று விடைகூறி மறுக்க.

இனி அப்பெரியோர் குணங்களைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

அப்பெரியோர், தமது மக்களுக்கு நடை பழக்குவதற்குத் தாம் அவர்கள் கையைப் பற்றிக்கொண்டு நடந்துகாட்டுந் தாய்மார் போலவும், நடனங் கற்றுக்கொடுப்போர் நடித்துக்காட்டுதல் போலவும், உலகத்தோருக்கிருக்கவேண்டிய முக்கிய குணங்களாகிய பொறுமை, சீலம், அன்பு, ஈகை, புகழ்பெற்ற வாய்மை, வருணங்களுக்கேற்ற விரதம் ஆகிய இவைகளைத் தாமே செய்து காட்டுவதன் மூலமாய், உபதேசஞ் செய்யுங்குணமுள்ளவர்; பிற மதங்களைப் பழிக்காதவர்; இது செய்யக் கூடியது, இது செய்யக்கூடாதது என்று பொதுவாகச் சொல்லுவதே அன்றி எவரையுங் குறிப்பிட்டுச் சொல்லத் தெரியாதவர்; தமது சுயநன்மையையுங் கெடுதலையுங்கவனியாதவர்; தம்மைச் சுற்றியவர்கள் கடைத்தேறு மார்க்கங்களைப்பற்றியே எப்பொழுதும் முயற்சிசெய்பவர்; இவர்பொருளாளர், இவர் தரித்திரர், இவர் நல்லோர், இவர் பொல்லார்

(282-ம் பக்கத்தொடர்ச்சி.)

மேல்நடப்பது இன்னது என்பதுவிளங்காது உணர்வெல்லாம் இழந்து தூக்கம் போன்ற நிலை ஜீவர்களுக்கு வரும். அப்பொழுது மூச்சிற்கெல்லாம் ஆதாரமான ஹ்ருதயஸ்தானத்தில் ஜீவன் தன் கருவியாதிகள் எல்லாம் தன் வித்யா கர்மவாஸனைகளுள் அடங்கப்பெற அவைகளுடன் தன்னம் தனியான நிலையில் வந்தமருவன். இதுதான் மரணாவஸ்தை முடிவு. இதுவரையில் தான்படாத பாடெல்லாம் ஜீவன் பட்டுத்தீர்த்துவிடுவன். இப்பொழுது பெருமூச்சு வந்துகொண்டே இருக்கும். மரணம், கர்மா, ஈச்வரன் இவைகளைப்பற்றி வாழ்நாளில் கருதி சாஸ்திர வழி நடந்த ஸத்ஜீவர்களைக் காட்டிலும் ஸாதாரண ஜீவர்களுக்கு இம்மரணாவஸ்தை அதிக பயங்கரமாக இருக்கும். வரவர மரண பயம் அதிகமாகிக் கொண்டேவர, பந்தம் பலப்பட்டுக்கொண்டே வரும்.

இம்மரணாவஸ்தைக்கு அடுத்த அவ்ஸ்தைக்கு உத்க்ராந்தி அவஸ்தை என்று பெயர். இந்நிலையில் ஹ்ருதயத்தில் தனிமையாக வந்தமர்ந்துள்ள ஜீவன், தேஹத்திலுள்ள பலவாறுயுள்ள வழிகளாக தேஹத்தைவிட்டு வெளியேறுவது. ஜீவர்கள் இவ்வாறு வெளியேறி இன்ன இன்ன நிலைகளை அடைந்து கர்மகதிப்படி திண்டாடுவர் என்பவைகளைப் பின்னர் எடுத்து விவரிப்போம்.

என்று கருதாதவர்; தமது நடுவு நிலைமையினின்றும் பிறழாதவர்; பயன் கருதி வேலை செய்யும் எவரையும் மதியாதவர்; எவர்க்கும் இனியவரா யிருப்பவர்; போனவற்றை நினைந்து வருந்தாதவர்: இனி வருபவற்றை நினைந்து ஏங்காதவர்; உலகத்தோர் விரும்புகிற பொருள்களைத் தமது கண்ணாற் பாராதவர்; அவ்வுலகத்தோராற் பார்க்கமுடியாத பரம்பொருளை உள்ளங்கை நெல்லிக் கனிபோற் பார்ப்பவர். ஒருவர் தம்மைப் பலவாகப் புகழ்ந்து நறுமணம் பொருந்திய சந்தன முதலிய வாசனைத் திரவியங்களைப் பூசி உபசரிப்பதில் விருப்பும், அற்பர்களை நடத்துவது போற் பலவாக இகழ்ந்து பேசில் வெறுப்பும் இல்லாதவர்; பசிவேளைக்குமட்டிற் கிடைத்தவற்றைப் புசித்துத் திருப்தியாயிருப்பவர்; தமது சரீரத்திற்கு நேர்ந்த பலவகைப்பட்ட நோய்களுக்கும் அஞ்சாதவர்; இந்தப்பேயாஞ் சகம்பழிப்பதற்குச் சிறிதும் பயப்படாதவர்; தங்கண்ணாற் பார்க்கப்படுகிற ஊர்வன முதலாய்த் தேவர் ஈறாயுள்ள எல்லாரும் ஞானமுள்ளவர்களேயென்று நினைத்து எவரையும் இகழ்ந்துரையாதவர்: தீபத்தைத் தலைகீழாகக் கவிழ்ப்பினும் அத்தீபம் எவ்விதம் மேல் நோக்கியே எரியுமோ அதுபோலவும், சந்திரன் கலைகுறைந்த காலத்திலும் வெளிச்சந் தருதல்போலவும், விலையுயர்ந்த மணிகள் பொடியாகிய காலத்திலும் ஒளிவிசுதல் போலவும், தமக்கு அடுத்தடுத்துத் துன்பம் வந்த காலத்திலும் தம் மன நிலையினின்றுந் தவறாதவர்; தன்னைக் கடைதலால் வருந்திய தேவர்களுக்குச் சாவா மருந்தாகிய அமுதத்தைக் கொடுத்துதவிய சமுத்திரம்போலத் தமக்குத் துன்பஞ் செய்தவர்களைக் கோபியாது, அவர்கள் தம்மை வருத்தியதன் பயனாகத் துன்பமடைவார்களே யென்றும் வருந்துபவர்; தம் உயிருக்கு இறுதிக் காலம் வந்த பொழுதும் இக்காரியஞ் செய்யின் உயிர் பிழைக்குமென்று பிறர் சொல்லின் அது பழிக்கத்தக்கதாயிருப்பின், சாதல் ஒருநாளைத் துன்பம், பழிபாவங்கள் என்றைக்குந் துன்பத்தை விளைவிக்கக் கூடியன என்பதை நன்குதெரிந்து கொண்டவராதலால் அப்பழி பாவங்கட்குட்பட்டகாரியங்களைச் செய்யச் சம்மதியாதவர்; சந்திரனும் பெரியோரும் பெரும்பாலுஞ் சமானமானவர்களாயினுஞ் சந்திரன் தன்னிடங்களங்கமிருப்பதைப் பொறுத்திருப்பதாலும், பெரியோர் ஒரு சிறு குற்றமும் தம்மிடம் பொருந்தப் பொறுக்கமாட்டாராதலாலும் சந்திரனிலும் உயர்ந்தவரெனக் கருதப்படுபவர். பொன்னைத் தட்டியும், பாலை நெருப்பிலிட்டுக் காய்ச்சியும், சந்தனத்தை அறைத்துங், கரும்பைக் கடித்தும், இடித்துமாகிய துன்பங்களைச் செய்தகாலத்தும், அவை தமக்கு முன்பு இருந்த நற்குணங்களின் பயனையே தருவனபோலப் பிறர்தம்மை என்ன கொடுமையாய் நடத்தினும் தம் வாயால் இனிமையையே பேசுபவர்.

இத்தகைய நற்குணமும் நன்ஞானமும் பொருந்திய பெரியோரைப் பிள்ளையாகப் பெற்றாரே மனிதர்களடைய வேண்டிய எல்லாப் பயனையுமடைந்தவராவார். அப்பெரியோர் பிறந்த குலமே பரிசுத்தமானது; அன்னார் பிறந்த தேசமே எல்லா மேன்மையும் பொருந்தியது.

நாம் எவ்வித குற்றஞ் செய்யினும் அவர் பொறுத்துக் கொள்ளுகிறார். இன்னும் எது வேண்டுமாயினுஞ் செய்யலாம் என்று அறியாமையால் நினைத்து எவ்வித சிறு குற்றமுஞ் செய்ய எண்ணலாகாது. ஏனெனின், அவர்கள் கோபித்தால், நாம், "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்தலரிது" என்ற வாக்கியத்திற்கேற்ப வேறு எவருடைய உதவியாலும் (அன்னார் கோபத்தினின்றுந்) தப்பித்துக் கொள்ளமுடியாது.

ஆகையால், "சீவன் முத்தரைச் சேவித்தோர்" என்ற வாக்கியத்தைக் கடைப்பிடித்து அப்பெரியோரை வழிபட்டு அவர்களைப் போலவே நடக்க முயலுவோமாக.

வேங்கடராமய்யர்.

---

கடையெலாங் காய்பசி யஞ்சமற் றேனை
யிடையெலா மின்னாத வஞ்சம்—புடைபரந்த
விற்புருவ வேலொடுங் கண்ணாய் தலையெலாஞ்
சொற்பழி யஞ்சி விடும்.

கள்ளார்; கள்ளுண்ணார்; கடிவ கடிந்தொரீஇ
யெள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்;—தள்ளியும்
வாயிற்பொய் கூறார்; வடுவறு காட்சியார்;
சாயிற் பரிவதிலா.

# வெரோனா நகரத்து இருகனவான்கள்

## THE TWO GENTLEMEN OF VERONA

இத்தாலியா தேசத்தில் வெரோனாஎன்று ஒரு நகரமுண்டு. அந்நகரத்தில், அன்டோனியோவின் புதல்வனான புரோட்டியஸ், வாலன்டயின் என்னும் தன் நண்பனுடன் அன்புடனும் அதியுல்லாசமாயும் வாழ்ந்திருந்தான். அக்காலத்தில் மிலான்பட்டணத்தில் நாகரீகம் ஓங்கியும், பிரசித்திபெற்ற பிரபு ஒருவர் அரசாட்சி செய்து வந்தமையால், நடையுடை பாவனைகளில் சீர்திருத்தம்பெறவும், மனித இயற்கை, உலகநடவடிக்கை, உலகானுபவங்களால் அறிவைப் பெருக்கவும் பாலியர் அனேகர் மிலானுக்குப் போவதுண்டு. வாலன்டயினும் கல்விகற்பதற்காக அந்நகரத்திற்குப் புறப்பட்டு, விடைபெற்றுக்கொண்டுபோக தன் நண்பனிடம் வந்தான். புரோட்டியஸுக்கும் அதேவயது. அவனுமவ்விதமாய்க் கல்வி கற்கவேண்டிய பருவத்தவனே. ஆகிலும் ஜூலியா என்னுமொரு பெண்மணியை மணம்புரிய வெண்ணங்கொண்டதால், வாலன்டயினையும் விட்டுப்பிரிய மனமில்லாமல், அவனையு மிலானுக்குப் போகவேண்டாமென்று வெகுவாய்க் கேட்டுக் கொண்டான். ஆனால், வாலன்டயினோ கல்வியின் முக்கியத்தை முன்னிட்டு, அவ்விடம் போக முன்னமே தீர்மானித்திருந்ததால், இவ்வாறு சொல்லலுற்றான்: “ஆ! புரோட்டியஸ், விடு காத்திருப்பவன் புத்தி விட்டளவேயாகும். நீ மாத்திரம் ஜூலியாவிடத்தில் அவ்வளவு அன்பு கொள்ளாதிருந்தால், இப்படி ஊரிலிருந்து சோம்பல் பிடித்துப்போக விடாமல், உலக வதிசயங்களைப்பார்த்து, உலகநடை பிடிபடும்படி, உன்னையும் என்னோடு அழைத்துக் கொண்டுபோவேனென்” என்றுசொல்லிப் பின்னும் “இதென்ன! இந்த அன்பு, இராப்பகல் தூக்கமில்லாமல், பெருமூச் செறிந்து கொண்டு, இந்த ஆசை எல்லாம் ஒருபார்வைக்கு, ஒருவார்த்தைக்கு என்றால், மனிதனுடைய புத்தி மிகவும் மாறாட்டமாய்ப் போய்விட்டது என்றுதான் எண்ண வேண்டியது ஆனாலும் நான் சொல்லுவதெல்லாம் உனக்கெங்கே மனதில் படப்போகிறது; எனக்கு நாழிகை ஆகிறது, நான் போய் வருகிறேன். நீ அடிக்கடி கடிதம் எழுது” என்றுசொல்லிவிட்டுப் பயணம் புறப்பட்டுப்போனான். புரோட்டியஸ், “ஆம் இவன் சொல்லுவது வாஸ்தவம்தான். என் விர்த்திக்கான விஷயங்களாவது, என் சினேகிதனைப்பற்றியாவது, எண்ணுவதற்கில்லாமல், இவளையே நினைத்துக்கொண்டிருக்கிறேனே” என்று ஆலோசிக்கலுற்றான்.

அப்போது வாலன்டயின் என்பவனுடைய சேவகனான ஸ்பீட் என்பவன், தன் எஜமானன் இவ்விடம் வந்ததாகத் தெரிந்து, அவரைத்தேட அவ்விடம் வந்தான். ‘என்னடா ஆடுபோல அங்குமிங்குந் திரிந்து கொண்டிருக்கிறாய்? உன் எஜமானர் அப்போதே போய்விட்டாரே’ என்று புரோட்டியஸ் சொல்ல, ‘ஐயா, நான் இடையன் காணாமற்போன ஆட்டைத் தேடுவதுபோல் நான் என் எஜமானனைத் தேடுகிறேன், அப்படியென்றால் யார்தான் ஆடோ தெரிந்துகொள்ளுங்கள்’ என்று கேலியாகச் சொல்லிவிட்டு, புரோட்டியஸுக்காக இவன் ஜூலியாவிடங் கொடுத்த கடிதத்திற்குத் தனக்கு அவள் வெகுமதி ஒன்றுங் கொடுக்கவில்லையென்றும், ஆகையால் அக்கடிதத்திற்கே மரியாதை செய்யாதவள் கடிதம் எழுதியவன் பேரில் எவ்வளவு அன்புள்ளவளோ எனச் சொல்லிக்கொண்டே ஓட்டமாய் ஓடிக் கப்பலுக்குச் சென்றான். புரோட்டியஸ் இதைக் கேட்டு வருந்திக்கொண்டிருந்தான்.

வாலன்டயின் மிலானுக்குச் சென்றதையும் அவன் சிநேகிதனான புரோட்டியஸ் அவ்விதம் போகாதிருப்பதையும் பார்த்த சிலர், புரோட்டியஸின் தகப்பனான அன்டோனியோவிடஞ் சொல்லி “அற்பப்படிப்பு சொற்பப்படிப்புள்ளவர்கள் கூட, ஊர்வழி பயணப்பட்டு நாகரீகம், ஜனங்கள் நடவடிக்கை முதலியவைகளை அதிகமாகக் கற்கப்போகிறார்களே. சண்டைக்குச் சிலரும் புதுதேசங்களைக் கண்டுபிடிப்பதற்காக வேறு சிலரும், பெரிய கலாசாலைக்கு மற்றவர்களுமாக எத்தனையோபேர் போகையில் அறிவில் மிகுந்த உமது மகன், விட்டிலேயே யிருந்து விண்பொழுது போக்குவானேன்?” என்று கேட்டார்கள்.

அன்டோனியோ, “அப்படியா? நல்லது” என்று சொல்லித் தன்மகனையும் உடனே புறப்படச் சொன்னான். அவன் ஜூலியாவின் அன்பு விஷயங்களைச் சொல்ல வெட்கித் திடீரென்று புறப்படுவதெப்படி என்று முறையிட்டுங் கேட்காமல், வேண்டிய வேலைக்காரரும் வேண்டிய திரவியமுங் கொடுத்து உடனே பிரயாணப்படுத்தினார்.

இதற்குள் ஜூலியா, ஸ்பீட் என்பவன் புரோட்டியஸினிடமிருந்து கொணர்ந்த கடிதத்தைத் தன் வேலைக்காரியாகிய லூஸெட்டா என்பவளிடமிருந்து பெற்றுக் கொண்டு, தனக்குப் புரோட்டியஸின் பேரிலுள்ள அன்பு தன் வேலைக்காரிக்குத் தெரியக் கூடாதென்று அக்கடிதத்தை வேண்டாமென்று சொல்லியும், அதைக்கொண்டு போனபின்பு, ‘என்னதான் எழுதியிருக்கிறது பார்ப்போம்’ என்று பின்னுங் கொண்டுவரச் சொல்லியும், அப்போதுங்கூட தன்காதல் தெரியாவண்ணம் கோபமாய்க் கடிதத்தைக் கிழித்தெறிவதுபோல் எறிந்துவிட்டு, பின் ஏதோவொரு வேலையாய், லூஸெட்டாவை யனுப்பிவிட்டு, கிழிந்துபோன துண்டுகளை யெல்லாம் ஒன்று சேர்த்துப் படித்துப் பார்த்தாள். அதில் புரோட்டியஸ் பிரியமாய் எழுதியவற்றைப் பார்த்து மிகுதியும் மனமகிழ்ந்தாள். தன்னை மணம்புரிய எண்ணின ஸர் எக்லாமூர் என்பவர் தக்க மனிதராயிருந்தும் அவர் பேரில் அன்பு இல்லாமலும், மார்கேஷியோ என்பவனுக்குப் பணமிருந்தும் அவன் போலியாயிருப்பதுபற்றியும் அவர்களிருவரையுந் தவிர்த்துப் புரோட்டியஸையே மணம்புரிய வேண்டுமென்று மிகுதியும் எண்ணங் கொண்டிருந்தாள். நாணத்தால் அதை வெளியே புலப்படாதபடி காப்பாற்றிவந்தாள்.

முற்கூறியவாறு, புரோட்டியஸ், தன் தகப்பன் ஆணைக்கேற்க, மிலான்பட்டணம் புறப்பட நேர்ந்தபோது, ஜூலியாவைக் கண்டு, அவளுடன் சொல்லிக்கொண்டு போகவந்தான். அவர்களிருவரும், இப்படிக் கட்டாயமாகப் போகவேண்டியிருக்கிறதே என்று மிகவும் துக்கித்து ஒருவரையொருவர் மறக்காவண்ணம் மோதிரங்கள் மாற்றிக்கொண்டு, அன்பும் பிரிவாற்றாமையு மிகுந்திட, நீர்ததும்பிய கண்ணோடும், வருத்தமுற்ற நெஞ்சோடும், வார்த்தை சொல்ல மாட்டாமல், கண்பார்வையால் மட்டுமே பார்த்து, அன்பைத் தெரிவித்துக்கொண்டு, கப்பலிலிருந்து அவசரப்படுத்த ஆள் வந்ததுபற்றிக் கூடியவாறு தேற்றிக்கொண்டு பிரிந்து போயினர்.

லான்ஸ் என்னும் வேலைக்காரன், புரோட்டியஸுக்கு உதவியாக அனுப்பப்பட்டான். அவன் ஊருக்குப் புறப்படும்போது, அவன் தாய், தந்தை, தமக்கை யெல்லோரும் மிகவும் ஆற்றாமல், வெள்ளப் பெருக்காயழுதார்கள். அவன் தனக்கு வீட்டு ஞாபகமாய் கிராப் என்னும் நாயைத் தன்னுடன் கொண்டுபோனான் இந்த நாய் அவனுக்குப் பலவிதமாய்க் கஷ்டம் கொடுத்துக் கதையில் சில வேடிக்கை விஷயங்களுக்குக் காரணமாயிருக்கும்.

இனி மிலான் பட்டணத்திலிருந்த பிரபுவுக்கு ஸில்வியா என்றொரு குமாரத்தி உண்டு. தக்க பெரிய குடும்பத்திலுள்ள பாலியர் அநேகர், அவளை மணம்புரிய எண்ணியும், மற்றும் அதிதியாய் வந்தவர்களும் அரண்மனையில்விருந்தாயும் இருந்துபோவதுண்டு. பிரபுவுக்கோ தன்மகளை, ஸர் தூரியோ என்பவனுக்குக் கொடுக்க மிகவும் வாஞ்சையுண்டு. இதுபற்றிஸர்தூரியோ எல்லோரினுமதிகமாய் அரண்மனையில் மரியாதை செய்யப்பெற்று அடிக்கடி ஸில்வியாவுடன் பேசிக்கொண்டிருந்தான். என்றாலும், ஸில்வியாவுக்கு ஸர் தூரியோவென்றால் வெறுப்பேயொழியச் சிறிதும் பிரியமில்லை. வெரோனா நகரத்திலிருந்து புரோட்டியஸிடம் விடைபெற்றுக்கொண்டு வந்த வாலன்டயின் என்னுங் கனவான் இவ்விடம் வந்தபோது, இவருக்கும் ஸில்வியாவுக்கும் அதிக அன்பு உண்டாய், தம் மனதுக்குள்ளேயே இருவரும் ஒருவரை ஒருவரன்றி மற்றையெவரையும் மணம் புரிவதில்லை யென்று சொல்லிக் கொண்டார்கள். பிரபுவுக்கோ, வாலன்டயின் அவ்வளவு அதிகமாகப் பிடிக்கவில்லை. ஸர் தூரியோவுக்குப் பல்வகைச்செல்வமும் அதிகமாயிருந்ததால் தன் பெண்ணின் நன்மையைக்கூடக் கருதாமல் ஸர் தூரியோவையே அவள் மணம்புரிய வேண்டியதென்று ஒரே

கருத்துக் கொண்டார். என்றாலும், வாலன்டயினையும் அவமரியாதை செய்வானேன் என்று பெருந்தன்மையாய் அவனையும் விருந்திட்டு உபசாரஞ்செய்து வந்தார்.

இப்படிச் சிலகாலங்கழிந்தபின்னர், புரோட்டியஸும் முற்கூறியவாறு மிலான் நகரத்துக்கு வரவே, பழைய சினேகிதர்களிருவரும் முன்னுள்ள அன்பு அத்தனையும்பற்றி அதிகமாகச் சிறிதும் மறைவின்றி வெகு ஆப்தமாகப் பேசிக்கொண்டார்கள். வாலன்டயின் தான் அனுப்பிய கடிதங்களுக்கு ஸில்வியா பதிலெழுத முடியாமல் தன் கையுரையொன்றையும், பின்னர் வாலன்டயினையே தனக்காக ஒருகடிதமெழுதச்சொல்லி, அதிலன்பு மிகுந்து ஒருவருக்கொருவர் எழுதுமாறு எழுதிவாங்கிஅதைஅவளெழுதியதாக இவனே படித்துக்கொள்ளும்படியாகக் கொடுத்தும், இப்படியும் மற்றும் பலவிதமாய் அன்புபாராட்டி வருவதையும் தன் நண்பனுக்குச் சொல்லி அவளழகுக்கீடில்லாமல், மற்ற எவரும் அவளுக்குக் கீழ்ப்படிந்து வேலைசெய்யவே தகுந்தவரென்றும் பலவாறாய்ப் பித்துப்பிடித்தவன்போல அன்பின் மிகுதியால் புலம்பினான்.

புரோட்டியஸ்: "இதென்ன! நானிவ்விதமாய்ப் பேசுங்காலத்தில் என்னை யெவ்வளவோ கண்டித்துப் பேசுவையே! இப்போது உன்மனதின் பித்தலாட்டம் என்னிடத்திலும் பதின் மடங்கதிகமாயிருக்கிறதோ?" என்றான்.

வாலன்டயின்: "ஆம், முன்னே வெறுத்ததற்கும், மற்றையோரை எள்ளனஞ் செய்ததற்குந் தண்டனையாக இக்காமத்தால் பட்டினியாயும், பெருமூச் செரிந்தும், இரவெல்லாமழுதும், பகலெல்லாம் வருந்தியு மிருக்கிறேன். இனி அன்பின் பேச்சைத்தவிர மற்றெதுவும் என் காதிற் செல்வதில்லை. அன்பைப்பற்றிய பேச்சே எனக்கு உணவும் உறக்கமுமாக இருக்கின்றன. அவற்றைத் தவிர வேறொன்றும் வேண்டாம். இவ்விதமாய் அன்பு கொண்டவருக்கு அன்பையே உயர்வாகப் பேசுவது மிகவும் பிடித்தம். ஸில்வியாவைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? உலகில் அவளுக்கு ஈடுமுண்டோ?"

புரோட்டியஸ்: "மிகவும் அழகு வாய்ந்தவள்தான்; என் ஜூலியாவைப் போலிருக்கிறாள். நல்லது நான் போய் கப்பலிலிருந்து என் சாமான்களை விடு கொணர்ந்து சேர்க்கவேண்டும்."

இவ்விதமாய்க் கூறிய புரோட்டியஸ், உஷ்ணம் உஷ்ணத்தைத் தணிப்பது போலும், ஒரு ஆணியை மற்றொரு ஆணி அடித்து வெளிப்போக்குவதுபோலும், ஸில்வியாவைக்கண்ட மாத்திரத்திலேயே, தனக்கு ஜூலிஜாவிடமிருந்த அன்பத்தனையு மிழந்துவிட்டு, நெருப்பில் அரக்கு உருகுவதுபோல் உருகி, தானே அவளை மணம்புரிந்து கொள்ளவேண்டுமென் றெண்ணங்கொண்டான். ஆகவே, ஜூலியாவுக்குத் தான் சொல்லியவார்த்தையுமறந்திட்டு, தன் உயிர் நண்பனுக்கே தான் செய்யுந் துரோகத்தையும் நினையாமல், தனக்கென்றே ஒரு முயற்சி தேடவாரம்பித்தான். வாலன்டயின், தூரியோவுக்கு ஸில்வியா வாழ்க்கைப்படாவண்ணம், அவளுடன் தானும், காட்டுக்காவது ஓடிவிடுவதென்று துணிந்து, அன்றிரவில் நூலேணி ஒன்று கொண்டுவந்து தப்பித்தோட ஏற்பாடுசெய்திருந்தான். அதை அவன் நட்பின் விஷயமாகச் சொல்லக் கேட்டு, அதை எவ்விதமாயாவது மிலான் பிரபுவுக்குத் தெரிவித்து, வாலன்டயினை அப்புறப்படுத்தித் தன்னிஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியதென்பதே இவன் சூழ்ச்சி.

இது இத்தகையதாயிருக்க, ஜூலியா, புரோட்டியஸின் பிரிவாற்றாமையால் எவ்விதமாயாவது அவனைப்போய்ப் பார்க்கக் கண்ணாவது க்ஷிக்குமென்று, தன் வேலைக்காரியோடு யோசனைசெய்து, அவன் சாதாரணமாய்த் திரும்பி வரும்வரை பொறுக்க முடியாமல், ஆண்வேஷம் தரித்து, பெரிய மனிதர் வீட்டில் வேலைக்கிருக்கும் ஆளாக அமர்ந்துகொள்ளும் வகைக்குத் தக்கபடி ஏற்பாடுசெய்து மிலான் நகரத்துக்குப் புறப்பட்டான். "நீ இவ்வளவு பிரயாசையெடுத்தும் அவ்விடத்தில் உன்னை அவர் கவனியாவிட்டால், என்னசெய்வாய்?" என்று லூஸெட்டா கேட்டாள். "ஆ, இழிவான மனிதருக்கல்லவா இழிவான வெண்ணந்தோன்றி,

சொன்னவார்த்தையை மாற்றுதலும் காதலரைக்கைவிடுவதும் ஸ்வபாவம்? புரோட்டியஸ் வார்த்தையின் உண்மையும், அவரன்பின் அளவும் எண்ணங்களின் நேர்மையும் யோசித்துப்பார்த்தால் இவ்விதமாய் நினைக்கத் தோன்றுமா?" என்றும் பின்னும் 'ஆற்றின் வெள்ளத்தை அணையிட்டுத்தடுத்தால் எங்ஙனம் பொங்கி, வெள்ளம் பெருகி அதன் வேகமும், மூர்க்கமும் அதிகரிக்குமோ, அதுபோலவே, இத்தனை நாள் அவர் முகம் பாராததால் வாஞ்சை அதிகரித்து எப்பொழுது காணப்போகிறோ மென்றிருக்கிறது' என்றாள். ஜூலெட்டா, தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, தன் தலைவி இங்ஙனம் காதலனைக் காணப்புறப்பட்டபடியால் அவள் இச்சைப்படியே அனுப்புவித்தாள்.

இதற்குள், புரோட்டியஸ், மிலான் பிரபுவை இரகசியமாய்க்கண்டு, தன் சினேகிதன் கயிற்றேணிகொண்டு, ஸில்வியாவிருக்கும் உப்பரிகையினின்று அவளை யழைத்துக்கொண்டு, இருவரும் ஓடிவிட எண்ணியிருந்த ஏற்பாடுகளைத் தெரிவித்தான். பிரபுவும் அவ்விதமாய் அடிக்கடி சந்தேகப்பட்டிருந்ததால், இது விஷயம் இவ்விதமாய்த் தன் காதுக்கெட்டவே, தக்க முயற்சிசெய்ய வேண்டுமென்று, வாலன்டயின் வரும் வழியில் இரவில் நின்றுகொண்டு, அவன் வந்தபோது அவனைக்கூவித் தன் மகள் தன் மனமொப்ப நடந்துகொள்ளாததால் அவளைப் பற்றிச்சிறிதும் அக்கரையில்லாதவனாய், தானே வேறு மணம்புரிந்துகொள்ள இஷ்டமுடையவனென்றும், அவ்விதமாய்த் தான் எண்ணங்கொண்ட பெண் தன்பேரில் பிரியமுள்ளவளாயினும், மற்றவர்கள் தடைசெய்வதால் தன்னெண்ணம் நிறைவேறுதல் முடியாதாயிற்றென்றும், இது விஷயமாய் வாலன்டயின், ஏதாவது உதவி செய்யமுடியுமாவென்றும், பலவாறாக அவன் மனதைச் சோதித்து, அவன் வாயினின்றுமே அவன் குற்றத்தையும் ஏற்பாடுகளையுமறிய வேண்டுமென்று கேட்க, வாலன்டயின், கயிற்றேணிகொண்டு உப்பரிகையேறி, இரவிலோடிவிடலாமென்று யோசனை சொன்னான். அந்த ஏணி எங்கே கிடைக்குமென்றும், எவ்விதமாய் உபயோகிக்க வேண்டுமென்றும், பிரபு பின்னும் வினவ, வாலன்டயின், சாதாரணமாகக் கடைகளில் கிடைக்குமென்றும், ஒரு புறத்தில் இரண்டு கம்பிகள் அறிவாள்போல் வளைந்திருக்குமென்றும், அந்த ஏணி மிகவும் லேசானபடியால், ஒரு முனையை கையில் பிடித்துக்கொண்டு இக்கொக்கிகளுள்ள மற்றொரு முனையை விசிறி, உயர எறிந்தால் கட்டிடத்தில் சன்னல் முதலிய விடங்களில் இவை பற்றிக்கொள்ள, சுலபமாய்ஏறவாவது இறங்கவாவது முடியுமென்றும், கள்ளமில்லாமல் வெள்ளைமனதோடு வெகு ஸ்பஷ்டமாய்ச் சொல்லிவிட்டான்.

பிரபு பின்னும் அந்த ஏணியை எவ்விதமாய்மறைத்துக்கொண்டு போகலாம் என்று கேட்க 'உமது உடைக்குள்ளேயே சுளுவாய் அடங்கிவிடும்' என்றான். 'உன் உடையை எடு பார்ப்போம், அதுயாதிரி உடை ஒன்று செய்தால் போதுமா' என்று கேட்டுக்கொண்டு, அவன் மறுதளிக்க வொட்டாமல் அவன் உடையைப்பற்றிப் பார்க்க அதில் அவ்வித நூலேணி ஒன்றும், ஸில்வியாவாகிய தன் புத்திரிக்கு, 'இதோ உன்னை விடுவிக்க வந்திருக்கிறேன்' என்று வாலன்டையின் எழுதிவைத்திருந்த கடிதத்தையுங்கண்டு, தனக்கு புரோட்டியஸ் சொன்னது உண்மையென்றும், தனக்கே தோன்றிய சந்தேகங்களுக்கு நிஜமாகவே இடமுண்டென்றும், இவ்விதமாய் அவன் செய்த ஏற்பாட்டைச் சாதுர்யமாகக் கண்டுபிடித்துக்கொண்டது அதிர்ஷ்டவசமென்று மாறிமாறி துக்கித்தும் சந்தோஷித்தும், பின் வாலன்டையினைப்பார்த்து "அடா உன்னை நான் எவ்வளவோ அருமையாய் என் அரண்மனைக்கு வரவழைத்து இதுவரை உபசாரம் செய்து வந்தேன். இதுதானா என்னுதவிக்கெல்லாம் நீ செய்யும் கைமாறு. சீச்சீ! நீ ஒரு கனவானா, உடனே இந்த ராஜ்ஜியத்தைவிட்டு வெளியேறு. இது விஷயம் ஒருகணம் தாமதித்தாலும், என் பிரஜைகளில் யாவரேனும் உன்னை எங்கே கண்டாராகிலும், உன்னைக் கொன்றுவிட உத்தரவுண்டு. ஆகையால் ஜாக்கிரதை' யென்றுசொல்லி விரட்டிவிட்டான்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

# வாய்

## THE MOUTH

ஜீரணேந்திரியங்கள் என்னும் வீட்டிற்கு வாயிலாக அமைந்தது வாய். நம் வீட்டின் வாயிலில், யாராவது வெறுக்கத்தக்க சரீரத்தோடு வந்தால், நாம் அவரைத் துறத்துகிறோம்; நிற்காமல் போகும்படி தள்ளுகிறோம். நம் வீட்டைத்தேடி, யாராவது சுத்தமான உடையோடும், சுத்தமான சரீரத்தோடும் வந்தால், நாம் அவரை எதிர் வந்து உபசரிக்கின்றோம். அது போலவே, கெட்ட ஆகாரம் வாயில்போட்டால் உடனே குமட்டிக்கொண்டு வெளியே வந்துவிடுகிறது: ஆகாரம் ருசியாகவும் நேர்த்தியாகவும் இருந்தால் வாயில் வெகுநேரம் வைத்து ருசிபார்த்துப் பிறகு உட்கொள்ளுகிறது. வெளியில் போய்விட்டு வந்தமனிதன் வீட்டுக்குட் செல்லுமுன் ஜோடு முதலியவற்றைக் கழற்றிக் குடை முதலியவற்றை ஒரு புறத்தே வைத்துக் கைகால்களைச் சுத்திசெய்து தயாரித்துக்கொள்வது போலவே, ஆகாரம் வயிற்றிற் செல்லுமுன், பற்களால் அரைபட்டு உமிழ் நீரோடு கலக்கப்பெற்றுத் தயார் செய்யப்படவேண்டும்.

வாய் என்னும் வீட்டிற்குக் கூரையாக அமைந்துள்ளது 'அண்ணம்' (palate). அது வாயின் முன்பாகத்தில், கடினமாயும், எலும்பு போன்றும், பின்பாகத்தில் மிருதுவாயும் சதைப்பற்றுள்ளதாயும் இருக்கிறது. மிருதுவான அண்ணத்தின் மத்தியிலிருந்து உள்நாக்குத் தொங்குகிறது. கடைவாயில் மிருதுவான அண்ணத்தின் இருபக்கத்திலும் (Tonsils) உண்ணாக்கு விசைநரம்புகள் இருக்கின்றன. நாவானது, வாய் என்னும் வீட்டிற்குத் தரைபோன்றது வாயின் பக்கங்களில், கன்னங்களும், முன்புறத்தில் உதடுகளும் இருக்கின்றன. கன்னங்களிலும், கீழ்வாய், நாக்கு, இவைகளுக்குக்கீழும், (salivary glands) உமிழ்நீர் விசை நரம்புகள் இருக்கின்றன.

ஆகாரத்தை விழுங்கும்பொழுது (soft-palate) மிருதுவான அண்ணம் மூக்குத்துவாரத்தை அடைக்கிறது. கடின அண்ணம் பேசும்பொழுது உபயோகப்படுகிறது. சில பேருக்கு அண்ணத்தில் ஒரு துவாரம் இருக்கும். இருந்தால் அவர்கள் சரியாய்ப் பேச முடியாது. உண்ணாக்கு விசைநரம்புகள், சுவாசப்பை, இரைப்பை முதலியவைகளுள், விஷப்பூச்சிகள் செல்லாதபடி தடுக்கின்றன. குழந்தைகளுக்கு அடிக்கடி மேற்கண்ட விசை நரம்புகள் பெருத்து நாவும் தடித்துப் போம் அப்பொழுது தொண்டை புண்ணாயிருக்கும். சில சமயங்களில் மூக்கின் பின்பாகம் வீங்கி வாயால் மூச்சுவிடும்படி நேரிடும்; அதற்குத் தக்க சிகிச்சை உடனே செய்ய வேண்டும்.

நாவை எத்திசையிலும் தாராளமாக அசைக்கலாம். நாவின் கீழ்ப்புறம் மிருதுவாயும், மேற்புறம், சொறசொறப்பாயும், இருக்கும். நாவின் மேற்புறமெங்கும் பலா முள்போன்ற வஸ்துக்கள் இருக்கின்றன. இவைதாம் சொறசொறப்புக்குக் காரணம். இம்முட்கள் இருப்பதால்தான் நாம் ருசியை நன்கு அறிகிறோம். நாவின் பின்பாகத்தில் பெரிய முட்களிருப்பதால்தான், ருசியை அங்கே மிகவும் நன்றாகக் கண்டறிகிறோம். சரியான தேகஸ்திதியிலிருக்கும்பொழுது நா சிவந்தும்,ஈரமுள்ளதாயுமிருக்கும். மேற்புறத்தில், சொறசொறப்பு உபாயமாய்க் காணக் கூடியதாய் இருக்கும். நோயுற்றிருக்குங்கால், வெள்ளிய ரோமம் படர்ந்ததுபோல் காணப்படும். நா தடித்தும், வழவழப்பாயும், நிறம் மாறியதாயும்இருக்கும். நாவில் ரோம மூடியதுபோல் கண்டால், இரைப்பையும், ஜீரணக் கருவியும் கெட்டுப்போய் விட்டன என்று அறிந்துகொள்ளவும். இது ரோகக் குறியாம்.

நாம் நாவினால் உணவை ருசிபார்க்கிறோம். உணவை மெல்லும்பொழுது பற்களிடத்திற் கொண்டுசேர்க்கவும், உணவை விழுங்குவதற்கும், பேசுவதற்கும், நா உதவுகிறது. தண்ணீரிற் கரையும் வஸ்துக்களைத்தான் ருசிபார்க்க முடியும். மற்றவற்றை ஸ்பரிசத்தினால்தான் அறியலாம். புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கைப்பு, உவர்ப்பு, கார்ப்பு என்னும் அறுசுவைகளைத்தான் நாவினால் ருசியறியலாம். உணவின் மணத்தை அடி மூக்கினால் முகருகிறோமே யல்லது, நாவினால் ருசி

பார்ப்பதில்லை. அதினால்தான் நாம் ஜலதோஷத்தால் வருந்தும்போது, சாப்பாட்டின் மணம் ருசி ஒன்றும் தெரிவதில்லை. மூக்கு அடைபட்டுப் போயிருப்பதால், உணவின் மணம் மூக்கில் எட்டுவதில்லை. அது காரணத்தாலேயே சிலர் விளக்கெண்ணெய் அல்லது வேறு துர்க்கந்தமுள்ள மருந்துகளை உபயோகப் படுத்தும்பொழுது மூக்கை அழுத்திப் பிடித்துக் கொள்கின்றனர். நாவுக்கு அடிக்கடி எரிவு கொடுக்காமல் பாதுகாக்கவேண்டும். இல்லாவிட்டால், பிளவை என்னும் கொடும் வியாதிக்கு இரையாகும்படி நேரிடும். ஆதலால் உப்பு உறைப்பு சேர்ந்த சுவைகளையும், மிக்கப் பக்குவப்படுத்திய ஆகாரங்களையும் அதிகமாய் உபயோகப் படுத்தலாகாது. சுங்கானில் புகை குடிப்பதினால், நாவில் எரிவு உண்டாகி நாவிலாவது உதட்டிலாவது பிளவை புறப்படுவதுண்டு. பல்லின் உட்புறத்தில் சொறசொறப்பிருந்து நாவின்மேல் அடிக்கடி படுவதினால் பிளவை உண்டாவதும் உண்டு. பல்லின் சொறசொறப்பைத் தந்த வைத்தியர்களைக்கொண்டு சுலபமாய் அராவிக்கொள்ளலாம்.

உமிழ் நீர் என்பது, உமிழ்நீர் விசைநரம்புகளால் செய்யப்படும் ஒருவித வஸ்து. உமிழ்நீரின் உபயோகங்களாவன: (1) உமிழ் நீர் உணவோடு கலந்து உணவை பிணைத்து சௌகரியமாக விழுங்கச் செய்கிறது (2) பக்குவஞ்செய்த பசையுணவைச் சர்க்கரையாக மாற்றி ஜீரணத்துக்குச் சாதகம் செய்கிறது. (3) வாயை எப்பொழுதும் ஈரமாகவைப்பதினால், உண்ணவும் பேசவும் முடிகிறது. உமிழ்நீர் உண்டாவதற்கும், வாயில் ஓடிவருவதற்கும், மூளையும், நரம்புமே கர்த்தாக்கள். திடீரென்று ஒருவனைப் பயமுறுத்திவிட்டால், அவன் வாயில் உமிழ்நீரும் சுரப்பதில்லை; வாய் காய்ந்து உண்ணவும் பேசவும் முடியாமற் போகிறது. இங்கே சீனர்களைப்பற்றி வழங்கும் ஓர் கதையைச் சொல்லுகிறேன். குற்றஞ் செய்தவரின்னாரென்று கண்டுபிடிக்க இதை ஒரு வழியாக உபயோகப்படுத்துகிறார்களாம்.

அனேகம் பேர்களுடன் சந்தேகப்பட்டவனையும் வரவழைத்து ஆளுக்குக் கொஞ்சம் அரிசி கொடுத்து உண்ணச் சொல்வார்களாம். அப்பொழுது குற்றஞ் செய்தவன் நெஞ்சு குறுகுறுக்குமாதலால், அவன் பயமடைவதால், மூளையும் நரம்புகளும் சரியாக வேலை செய்யாமற்போக, உமிழ் நீரும் நின்று விடும். மாவாகப்போன அரிசி, மேல் வாயையும் கீழ் வாயையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு, தொண்டையில் சிக்கிக்கொண்டுமிருக்க குற்றவாளி உணவை விழுங்க முடியாமல் தவிப்பாளும். இக்கதை விநோதமாயிருந்தபோதிலும், முற்றும் உண்மை என்று எண்ண இடமில்லை. ஏனென்றால், நல்ல ஆகாரத்தைப் பார்த்தாலும் வாசனை பிடித்தாலும், அதைப் பற்றி நினைத்தாலும், வாயில் ஜலம் ஊறுகிறது. புளிப்பு வஸ்துக்கள் உமிழ்நீரைப் பெருகச் செய்கின்றன. எலுமிச்சம்பழ ரசமானது, தாகத்தைச் சுலபமாகவும் சீக்கிரமாயும் சாந்தி செய்கிறது. ஆகையால்தான் மலைமீதேறிச் செல்பவர்கள், எப்போதும் தங்கள் கைவசத்தில், எலுமிச்சம் பழங்களை வைத்திருக்கிறார்கள்.

உமிழ் நீரை வீணாகச் செலவு செய்தால் வாய்சீக்கிரம் வறண்டுபோவதுடன், பேசவும் உண்ணவும் மெல்லவும் முடியாது. தவிர, விசை நரம்புகளுக்கு அனுவசியமாய் அதிக வேலை கொடுக்கும்படியாகிறது. புகைகுடிப்பவரில் சிலர் உமிழ் நீரை வீணாக்குகிறார்கள். உமிழ் நீர் வீணாய்ப்போவது நன்றாய்த் தெரிந்தும், புகை குடிப்பது அறிவிலிகளினியல்பு. புகையிலையை வெற்றிலையோடு சேர்த்து உபயோகிப்பதும் தகாத காரியமே; ஏனென்றால் உமிழ் நீர் அடிக்கடி வீணாகச் செலவழிகிறது; பற்கள் வெண்மை நிறங்கெட்டு, பழுப்பு, கருப்புமுதலான நிறங்களையடைகின்றன. தவிரவும், ஒருவிதமான விஷ பதார்த்தம் ரத்தத்தில் சேர்ந்து அதைக் கெடுத்து, சுகத்தையும் கொள்ளை கொள்கிறது.

துப்புதல் அசுத்தமாயிருத்தலோடுகூட ஓர் அபாயகரமான வாடிக்கை. வீடுகளில் கண்ட விடங்களில் துப்பினால், மனதிற்கு அரோசிகமாய் இருக்கிறது. மேலும் யார் மேலாவது எச்சில் பட்டால், அவர் நம்மை வெறுக்கின்றனர். தவிர, ஜனங்களின்

வாயில் பல வியாதிகளின் கருக்கள் ஆயிரக் கணக்காகஇருக்கின்றன. ஜனங்கள் கண்ட விடங்களில் துப்புவதினால், பற்பல வியாதிகள் பரவுவதற்கு இடமுண்டாகிறது. உமிழ் நீருக்கும் கபத்துக்கும் சம்பந்தமில்லை.

க்ஷயரோகம் என்பது ஒரு பயங்கரமான வியாதி. இதற்கு ஒவ்வொரு வருஷமும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இரையாகின்றனர். இவ்வியாதி உண்டாவதெப்படியெனில், ஒரு சிறிய விஷப்பூச்சி சுவாசப் பைக்குள் புகுந்து, அதைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து விடுகிறது. இவ் வியாதியால் பிடிக்கப்பட்டவர்கள் சுவாசப் பையிலிருந்து, லக்ஷக்கணக்கான விஷப் பூச்சிகளோடுகூடிய கபத்தை வெளிவிடுகின்றனர்.

இப்பேர்ப்பட்ட கபத்தைக் கண்ட விடங்களில் துப்புவதினால், இப்பூச்சிகள் ஆகாயத்திலும், ஆகாரத்திலும் கலக்க, சுவாசிப்போர், உண்போர் இவர்களையும் க்ஷயரோகம் பிடிக்கிறது. ஆகையால் வீடுகளிலும், தெருக்களிலும் பொது ஸ்தலங்களிலும் கபத்தைக் கக்குதல் கூடாது. க்ஷயரோகம் மாத்திரமன்று; மற்று எல்லா ரோகங்களும் அக்கபத்தின் மூலமாய்ப் பரவலாகும். ஆதலால் அவர்கள் கையில் துணிவைத்திருந்து, அவைகளில் துப்பி, பிறகு அவைகளை எரித்து விடலாம். அல்லது கையில் சிறிய காளாஞ்சி வைத்துக்கொண்டு, அதை உபயோகப்படுத்தி, பிறகு சில திராவகங்களால் காளாஞ்சியைச் சுத்திசெய்யலாம். வாயில் முத்தம் இடுவது அபாயகரமான வழக்கம். ஏனென்றால் அதன் மூலமாய் க்ஷயம், சுரம், வைசூரிமுதலிய வியாதிகள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவலாகும். க்ஷயரோகிகள் பிறரையாவது, பிறர் க்ஷயரோகிகளையாவது வாயில் முத்தமிடலாகாது.

வீ. சுப்பிரமணியம், பீ. ஏ.

## தற்செயலாய் நேரும் அபாய ஸம்பவங்களும், அவற்றின் ஆரம்ப சிகிச்சைகளும்

## ACCIDENTS & EMERGENCIES

### Hemorrhage— இரத்தத் தெறிப்பு

இரணங்களிடத்திலிருந்தும், தற்செயலாய் நேரும் பல விதமான காயங்களிடமிருந்தும், வெளிக்கொட்டும் இரத்தம், பார்ப்பவர்க்கும், இரத்தநஷ்டமடைவபவர்க்கும் கஷ்டத்தை யுண்டாக்கக் கூடியது. வினைக இரத்தம் மிதமிஞ்சிச் சேதமானால், பிராணஹானிக்கிடமென்றும், அப்படியில்லாவிட்டாலும் நெடுநாள்வரை ஸ்வஸ்தமடையமுடியாத துர்ப்பலத்தை யுண்டாக்கக் கூடியதென்றும் யாவருமறிந்த விஷயமே. இதற்குக் காரணம் இரத்தத்தெறிப்பு மிகச் சாதாரணமாக நேரும் ஸம்பவமாகையால், ஒவ்வொருவரும், அந்தஸமயங்களில் இரத்தம் வெளிப்போவதைத் தடுப்பதற்குத் தத்கால சாந்தியாகவேனும் என்ன செய்யவேண்டும் என்பதை அறியவேண்டிய தத்யாவச்யகம். இவ்விஷயத்தை அறிவதற்கு உடம்பினுள் இரத்தம் எவ்வாறு ஹிருதயத்திலிருந்து உடல் முழுதுமோடி மீண்டும் ஹிருதயத்துள் வந்து சேர்கிறதென்பதை நன்ருக அறியவேண்டும்; எந்தெந்த எலும்பின் புடைப்புமேல் இரத்தக் கால்வாய்கள் ஓடுகின்றனவென்றும், அவற்றை அப்புடைப்புகளின்மேல் எவ்வாறு தாக்க முடியுமென்பதையும் அறியவேண்டும்.

இரத்தத் தெறிப்பு மூன்று வகைப்படும்; அவ்வகைக்கேற்ப சிகிச்சை வேறுபடும். ஆகையால் அவ்வகைகளை நாம் அறியவேண்டும். அவை;

(1) ஹிருதயத்திலிருந்து வெளியோடும் இரத்தக் கால்வாய்கள், அதாவது சுத்திபெற்ற இரத்தத்தைக் கொண்டுசெல்லுங் கால்வாய்களில் நேரும் இரத்தத்தெறிப்பு;

(2) ஹிருதயத்தை அடையப் போகும் இரத்தக்கால்வாய்கள் அதாவது, அசுத்த இரத்தத்தைக் கொண்டுசெல்லுங் கால்வாய்களில் நேரும் இரத்தத் தெறிப்பு;

(3) ஷை இரண்டு கால்வாய்களும் மயங்குமிடத்தில் சேரும் இரத்தக்கசிவு.

முதல் சொன்னதில், பிராணவாயு நிறைந்து சுத்தமடைந்திருப்பதால் இரத்தம் சிவந்து குருவிந்த வர்ணமா யிருக்கும். தான் குவிந்தும் விரிந்தும் உண்டாக்கும் துடிப்பால் தன்னிடத்திலிருந்து ஹிருதயம் இரத்தத்தை ஓட்டுவதால், சுத்தரத்தமுள்ள கால்வாய்களில் ரத்தம் ஒரேகதியாக ஓடாது. ஆகையால், சுத்த இரத்தமோடுங் கால்வாய்க்கு, இரத்த ஓட்டத்திற்குத் தடையேற்படாது ஊறுண்டானால், வெளித்தோன்றும் இரத்தம் எழும்பிக் குதித்து வெளிவரும்; ஹிருதயத்தின் துடிப்போடொத்து எழும்பிக் குதிக்கும். கால்வாயின் வாய் சிறிது தடைபட்டிருப்பின், இவ்வாறு எழும்பிக் குதிக்காதிருக்கலாம்; ஆயினும் இரத்தம் அதிகுறைவாக வாயினும் நின்று நின்று எழும்பித் தட்டித்தட்டி விழுவது தெரியும்; சிறிய கால்வாயானால் இரத்தம் குதித்து விழாவிடினும் தயங்காது கொட்டும்.

இரண்டாவதாகச் சொன்ன இரத்தம் ஹிருதயத்திடம் போவது; அதை முதல் சொன்ன இரத்தத்தைப்போல் ஓட்ட விசை ஏற்படுத்த ஒன்றுங் கிடையாது. ஆகையால் அது ஒரே நிலையாக ஓடும்; தாரைபோல் விழும். மேலும் இவ்விரத்தம் உடல்முழுதும் பரவித் தான் கொண்டு சென்ற பிராண வாயுவை அங்கங்கு அந்த அந்தக் கோசங்களுக்குக் கொடுத்துத் திரும்புவதால் பிராண வாயுவில்லாமல் இருக்கும். அதனால் இந்த இரத்தம் சிவப்பு வர்ணம் குறைந்து நீலம் பாய்ந்திருக்கும்; முதல் வகுப்பிற் சேர்ந்த கால்வாய்களிலிருக்கும் இரத்தத்தைக் காட்டிலும் கறுத்திருக்கும்.

மூன்றாவது இரத்தக்கசிவு. சிவப்புரத்தக் கால்வாய்கள் அநேகங் கிளைகளாகப் பிரிந்து உடலில் பாய்கின்றன. அவை வரவர சிறுத்து மயிர்போல் சிறிய ஓட்டையுள்ள கால்வாய்களாகக் கடைசி நிலையில் இருக்கும். அந்த ஸமயத்தில்தான் இரத்தத்திலிருக்கும் பிராண வாயுவை யுடலிற்குக் கொடுக்கும். இவ்விதம் உடலிற்குத் தன்னிடமிருக்கும் பிராணவாயுவைக் கொடுத்துவிடுவதால் இரத்தம் தனது சிவப்பு நிறம் நீங்கி மங்கிவிடுவதுடன் உடலிலிருக்கும் அசுத்தங்களையும் பெற்றுக்கொள்வதால் நீலம் பாய்ந்து விளங்கும். இவ்விடம் இரத்தம் மெதுவாக ஓடும். முதல் சிறியஇடத்தில் ஓடிய இரத்தம் இப்பொழுது பரவி ஓடுதலால் இங்கு வேகக் குறைவோடு விளங்கும். இம்மயிர் போன்ற கால்வாய்கள் மீண்டும் ஒன்றுசேர்ந்து கனத்தகால்வாய்களாகி இவைமீண்டும் ஒன்றாகி ஹ்ருதயத்துள் சேர்கின்றன. இவற்றிலிருந்துதான் அசுத்தமான இரத்தம் ஹ்ருதயத்துள் சேர்ப்பிக்கப்படுகிறது. நிற்க, முன்சொன்ன மயிர்போன்ற கால்வாய்களில் உடைப்புண்டானால் இரத்தம் மெதுவாகக் கசியும். அதற்கு முன்சொன்ன வேகக்குறைவேகாரணம். மேலும் இக்கால்வாய்களின் குழாய்கள் கனமற்றவைகளாயிருப்பதால் நமக்கு எந்த இடத்திலிருந்து இரத்தம் சிந்துகிறதென்று காணமுடியாதாகும்.

உடலில் சிலபாகங்களில்வெட்டுண்டானால் கணக்கு மிதமில்லாமல் இரத்தங்கொட்டும். இடையே எலும்புகள் முதலிய தடை இருக்குமாயின் இரத்தக்கால் வரையும் வெட்டு ஓடாது. மார்பிலும் உடலிலும் ஓடும்பெருமிரத்தக்குழாய்கள் முதுகெலும்புகளால் வெளியிலிருந்து அபாயங்களிலிருந்து காப்பாற்றப்படுகின்றன. ஆயினும், சிறிய கால்வாய்கள் வெட்டுண்டு பெருமிரத்தநஷ்ட முண்டாக்கலாம். மார்பெலும்பிற்கு இரு பக்கங்களிலும் விலாவெலும்புகளின் கீழ்ச் சுத்தரத்தக் கால்வாய்க ளிரண்டு ஓடுகின்றன. மார்புள் ஊடுருவிய குத்துக் காயத்தால் அவை பிளவடையுமானால் பிராணச்சேத முண்டாக்கக் கூடிய இரத்த நஷ்டத்தையுண்டாக்கும். வேறெங்குண்டாவதைக் காட்டிலும் வயிற்றிடம் காயமுண்டானால், அவ்வெட்டு அவ்வளவு அபாயமுடையதென்று சொல்லமுடியாது.

கழுத்துள் ஓடும் பெருமிரத்தக்குழாய்கள் பக்கத்திற்கொன்றாய் ஓடுகின்றன; பூணூர எலும்புகளிடமிருந்து அவை மேல்பக்கமாகச் செல்கின்றன. பூணூர எலும்புகளிற்கு உள்பக்கம் ஒரு அங்குலம் கீழ் அவை ஆரம்பித்துக் கீழ்த்தாடைக்குங் காதுக்கும் நடுவில் ஒரு இடம்வரைஓடுகிறது. இவ்விடம் கைவைத்துக் கவனித்தால் நாடி சப்தம் நன்றாகத் தெரியும்.

கைகளில், புஜத்திற்கும் முழங்கைக்கு நடுவில், இரத்தக்குழாய்கள் அக்கிளிலிருந்து கிளம்பிப்புயத்தின் உட்புறமாகக் கீழ்நோக்கி வருகின்றன. முழங்கையண்டை வரும்பொழுது, அம்முழங்கையின் வளைவின் முன்பக்கத்தில் நடுப்பாகத்தில் முன்புறமாகப் பாய்ந்து செல்கின்றன. ஆகையினால் இந்தப் பாகத்தில் எலும்பு இரத்தக் குழாய்களை வெட்டு முதலிய அபாயங்களிலிருந்து தடுக்கமுடியாதென்று ஏற்படுகிறது; ஆனால் அக்கால்வாய்கள் கைகளின் உட்பிரதேசத்திலிருப்பதால் தமது இடத்தமைப்பால் காக்கப்படுகின்றன. முழங்கைக்கும் மணிக்கட்டிற்கு மிடையே இரண்டு பெரிய இரத்தக்குழாய்கள் முழங்கை எலும்பிற் கிருபக்கங்களிலும் அடித்தாற்போல ஓடுகின்றன. இவ்வெலும்புகள் ஒன்றை ஒன்றடுத்திருக்கின்றன. ஆகையால் இவ்விடம் இரத்தக் கால்வாய்கள் வெட்டுக் காயங்களிலிருந்து எலும்புகளால் பின்பக்கத்திலும், பக்கங்களிலும் உண்டாகக் கூடிய வெட்டுக்காயம் படாமல் காக்கப்படுகின்றன. முழங்கையின் மேல்புறத்தில் தடவினால், இரத்தக் கால்கள் கைக்குப் புலப்படும். மணிக்கட்டில் வெளிப்படையாக மேற்புறம் கால்களிருப்பதால்தான் வைத்யர்கள் நாடியைக் கவனித்துப் பார்க்கிறார்கள்.

ஹஸ்தத்தில் பெரிய இரத்தக் கால்வாய்கள் உள்ளங்கையில் நடுப்பாகத்தில் ஆழ்ந்து கிடப்பதால், இவ்விடம் வெட்டுக் காயமுண்டானால், பிளவடைந்த காலின் இரண்டு வாய்களிலிருந்தும் இரத்தம் கொட்டலாம்.

வயிற்றிலிருந்து அரைப்பூட்டு வழியாகப் பாய்ந்துவந்து ஒருபெரும் இரத்தக்குழாய், இடுப்பிற்கும் முழந்தாளிற்கு நடுவே காலில் ஓடுகிறது. அது உட்புறமாகக் கீழ் நோக்கி வந்து, வரவர முழந்தாளண்டை உட்புறமாகக் காலின் பின் பாகத்து மையத்திலோடுகிறது. முழந்தாளிற்குக் கீழ் இரண்டு இரத்தக்கால்களிருக்கின்றன. இவை இரண்டு எலும்புகளின் நடுவிலிருப்பதால் வெட்டுக் காயங்களால் கணைக்கால் வரையும் இவற்றிற்குச் சேதமுண்டாகாது கணைக்காலில் அவ்விடத் தெலும்புகளின் மத்தியில் ஓடுகிறது. பாதத்தில் அவற்றின் அமைப்பு உள்ளங்கையி லெப்படியோ அப்படியே. இங்கும் ஊறுண்டானால் இரத்தக் காலின் வெட்டுண்டு ஏற்பட்ட இருவாய்களிலிருந்தும் இரத்தங் கொட்டலாம்.

நாம் இதுவரையும் எழுதியது சுத்தரத்தக் கால்களைப்பற்றியே. ஆனால் இவைகளோடு இணைந்து கறுப்பு ரத்தக்கால்களுமோடுகின்றன. அவற்றிற்கு முன்சொன்ன கால்களுக்குண்டாகும் சேதங்களுண்டாகும். காலுங் கையும் ஒரேவிதமாக இரத்தத்தைப் பெறுவதால், இரண்டிடங்களிலும் இரத்தத் தெறிப்பிற்குச் சிகித்ஸை முறை ஒன்றுதான்.

முன்விவரித்த இரத்தக்கால்களன்றிவேறு இரத்தக் கால்வாய்களும், காயமடைந்தால் இரத்தத்தை மிகுதியாக வெளியிடலாம்; சில ஸமயங்களில் பிராண நஷ்டம் ஏற்படும்படிக்கூட இரத்தத்தை வெளியிடலாகும். உதாரணமாக, தோலிற் கடுத்தாற்போல காலில் இருக்கும் கறுப்பு இரத்தக் கால்கள் மிகப் பருத்து 'பெரிய காரிரத்தக் கால்' எனவழங்கும் இரத்தக்கால்களை யுண்டாக்கலாம். அடி ஒன்றால் இக்கால்வாய்கள் பிளவாவது சேதமாவது அடையலாம். அப்பொழுதுண்டாகும் இரத்தத்தெறிப்பு மிக அபாயகரமானது; பிராணத்திற்கே ஹானியாக முடியினும் முடியலாம். முகத்திலும், கன்னப்பொறியிலும், தலையின் பின்பாகங்களிலும் உண்டாகும் வெட்டுகள் மிக அதிகமாக இரத்தத்தை வெளியிடலாம். ஆகையினால் இரத்தத்தெறிப்பைத் தடுப்பதற்கு உடற் கூட்டுள், இரத்தக் கால்வாய்கள், செவ்விரத்தக்கால்கள், காரிரத்தக்கால்களாகப் பிரிந்து, பரவி விளங்கும் அமைப்பை ஏறக்குறைய அறியக்கூடிய ஞானம் இருத்தல் நலமாயிருக்கும். இனி இரத்ததெறிப்பைக் குறைப்பதற்கும், நிறுத்துதற்கும் செய்யவேண்டிய சிகித்ஸா முறைகளைக் கவனிப்போம்.

# உலக ஸம்பவங்கள்

# How the World moves

யுத்தம் உக்ரமாகத்தான் நடந்து வருகிறது. நாம் முற்கூறியவாறு நேசத்துருப்புகளுக்கே ஜயம் கிடைக்கும் என்பதற்குச் சந்தேஹமே இல்லை.

கிழக்கத்திய அரங்கத்தில் ருஷ்யர்கள் மத்த கஜங்கள்போல, துருக்கி சைன்யத்தை மற்குணத் தொகுதிபோல் தேய்த்து வருகின்றனர். எந்த விதமான கஷ்டத்திற்கும் பின்வாங்காது காகஸஸ் மலையைத் தாண்டி, அவர் துருக்கிநாட்டின் பெரும் படைவிடாயிருந்த எர்ஜரம(Erzerum)கோட்டையைத் தகர்த்துக் கவர்ந்தனர். பிடிபடாத துருக்கிசேனையின் பின்வாங்கிய தொகுதியையும் நாடிச்செல்கின்றதாகத் தெரியவருகிறது. முக்காலே மூன்றுவிசம் அவர்கள் "ட்ரெபிஜாண்ட்" என்னும் பேரரண் கொண்ட துறைமுகத்தை நாடியும் போகலாம். அவ்வாறு போவதால் மேற்சொன்ன பட்டணத்தைக் கடல்மூலமாயும் நிலமூலமாயுங்கலந்து தாக்கலாகும். ட்ரெபிஜாண்டைக் கவரும்படி நேர்ந்துவிட்டடால் துருக்கியின் பலம் முறிபடும்.

துருக்கிநாட்டிற்குள் நுழைய மூலவழியாகிய எர்ஜரம் பிடிபட்டது ரஷ்யரது பேராற்றலாலன்றி யாகாது. அக்கோட்டை பிடிபட்டது துருக்கியின் விலா வொடிந்ததேயாகும். மேலும் மெஸபொடேமியாவில் இந்திய சேனையின் வியவஹாரங்களுங் கலந்தால் துருக்கியின் பாடு திண்டாட்டமே. ஈஜிப்டின்மேல் படையெடுப்பு ஆயத்தமெல்லாம் இனி அதனால் முடியாதாகும். விட்டில் பகைவனை வைத்துக்கொண்டு வெளியேற முடியுமா? இந்தியாமேல் துருக்கி படையெடுக்க வேண்டுமென்று கண்டுகொண்டிருந்த கனவு இனிக்காண ஸமயம் நெடுங்காலம் வரை ஏற்படாது!

மேல் அரங்கத்தில் மந்தகதியாக இருந்த ஜர்மானியர் வேர்டன் என்னுமிடத்தில் பலமாகக் கூடித்தாக்குவதாகத் தெரியவருகிறது. இவ்விடம், போர் மும்முரமாக இருத்தல் ஆச்சரியமல்ல; தமது கையாலாகாத் தன்மையை வெளிக்காட்டா திருப்பதற்காக இந்த ஆடம்பரமாகும். மேலும் இவ்விடம் தாக்காவிட்டால் ருஷ்யர்களுக்கு இங்கிலிஷ் பிரெஞ் துருப்புகள் உதவியாகப்போய் முன்னமே விராப்புடன் விளங்கும் ருஷ்யருக்கு உதவாமலிருக்கத் தடுப்பதற்கிருப்பினுமிருக்கலாம். ஆயினும் இவ்விடத்தில் ஆள்சேத மதிகமாக ஜர்மானியர்க்கிருப்பதல்லாமல் ஜயம் என்பது கிடைப்ப தரிதாயிருக்கிறது. என்ன செய்வார்கள்? அவர்க்கு வேறு வழியில்லை. தட்டித் தடுமாறி ஓர் இடத்தில் சற்றுமுன் வந்தார்களென்பதே தவிர்த்து, மற்றுப் போர்முனையின்விஸ்தீர்ணமுழுதும் பின்வாங்கினரென்பது அவர் ஆற்றலுக்குப் பெருமையா?

நிற்க, தெற்கரங்கத்தில் ஆஸ்ட்ரியர்களைப் பெஸ்ஸராபியாப் பிராந்தியத்தில் முதுகொடித்துப், புகொகோவியாவிலிருந்தும் துரத்துவதற்கு ருஷ்யர்கள் கார்யம் நடத்துகிறார்கள். அவருடைய கார்யம் பலனடையும் என்பதற்கு உஸ்ஸிஸ்கோ என்னுமிடத்தில் நீஸ்டர் நதிக்கரையிலிருந்து ஆஸ்ட்ரியர்கள் தள்ளப்பட்டதே போதுமான அத்தாட்சி. இந்நிலையை அடைந்தால் யவன தேசத்தில் ஸலோனிகா என்னுமிடத்தில் தங்கிய ஆங்கிலேய சேனையும், ருஷ்ய சேனையுமாகச் சேர்ந்து பல்கேரியாவைக் கத்தரியிலழுத்துவதுபோலத் தாக்கும். அப்பொழுது துருக்கியின் பாடு என்னவாகுமோ? ருமேனியா நாடும் அப்பொழுது மோனநாடக மாட முடியாது. ஜர்மானியர்கள் தமது ஆற்றலாலும் மிரட்டலாலும் ருமேனியாவை வெருட்ட முடியாது; அக்காலம் அப்பொழுதே போய்விட்டது. நல்ல ஸமயத்திற்காகவே ருமேனியா காத்திருக்கும் என்பது

திண்ணம். அதற்குப் பென்ஸில்வேனியா வின்மேல் கண்; அந்நாடு அதனிடமிருந்து ஆஸ்ட்ரியர்களால் கவரப்பட்டது. அதை ஜர்மனி அதற்குக் கொடுக்க ஒப்புவதற்கு ஹங்கரி நாடுஇடம் கொடுக்கும் என்பதுகனவி லுமாகாது. தனக்கு மூன்று பக்கங்களி லும் பகைவர்வீடாக அமைந்திருப்பதை நினைத்தே ருமேனியா மௌனம் கொண் டிருக்கலாம். புகாோவியாவில் ருஷ்யர் படை யெடுப்பும், ஸலோனிகாவிலிருந்து பல்கே ரியாமேலும் நேசத்துருப்பின் படையெடுப் பும் கலக்கும்போது அது தனது பகைவரைத் தாக்க நமது சேனையுடன் கலக்கும் என்பது தவறாகாது.

ஆஸ்ட்ரியர்கள் டூரோஜோ என்னுமிடத் தைப் பிடித்து மாண்டிநீக்ரோ நாட்டிற் செல்வது பெரும்பெருமையாகாது. காட்டத் தகுந்த இடத்தில் வீரங்காட்டாது சிறிய நாட் டைத் தாக்குவது, தமக்குப் பெருமைக்குப் வேறுவழியில்லாமையால்எளியோரைப்பிடி ப்பதே யாகும்! முற்கூறியவாறு இச்சண்டை யைஆங்கிலேயகாவாய்ப்படையேமுடிவிக்கும் என்பதிற் கிவையெல்லாம் அத்தாட்சியாகும்.

***

ஜர்மனி நாட்டிற்கு இப்பொழுது இன்ன துதான் செய்வதென்று தெரியவில்லை. பித் தந்தலைக்கு ஏறஏற மயக்க மிகுதியால் தன் நினைப்பு மறந்துவிடுவது இயற்கையே யன்றி வேறல்ல. உயிராபத்திலிருக்கும்பொ ழுது ஆச்சுது போச்சுது என்றுதான் யா வர்க்கும் காரியங்களை நடத்தமுடியும்; அறிவு நல்லெண்ணம் எல்லாம் அப்பொழுது காற் றாய்ப் பறந்து போகும். தன்வினை தன்னை யே சுடும்படியாகச் செய்துகொண்ட ஜர் மனி, தான் சண்டையிலிருந்து கௌரவ மாக வெளிவருவதசாத்ய மாகையாலும், தாழ்ந்து போவதற்கு மனச்சம்மத மில்லா மையாலும், கண்மூடிதர்பாராக, யுத்த நடவ டிக்கைகளின் ஒழுங்குகளைக் கவனிக்காது, எல்லாக் கப்பல்களையும், பேதாபேத மில்லா மல், எந்நாட்டாரதாக விருப்பினும், மதிக் காது, வெடிகுண்டுகளிற் கிரையாக்க நிச்ச யித்த கொடுமையிலும் கொடுமைவேறுமுண் டோ?பகுத்துணர் வடையு மனிதன் எவனும் ஸம்மதியாதபடி, அபலைகளாகிய பெண்களை யும், குழந்தைகளையும் ஹத்திசெய்வதற்கு எக்காலத்திலாவது,எந்நாட்டிலேனும், ஏதே னும் யுத்தமுறை யிடங்கொடுத்த தெங்கே னுமுண்டா? ஜர்மனிக்கு மாத்திரம்இந்த சீரி யமுறையைப் பிரஹ்மா விதித்தாரோ என் னமோ தெரியவில்லை. இக்கொடிய ராக்ஷ ஸப்பூண்டை ஒழிக்கக் கடவுள் காத்திருப் பார் என்பதற்கையம் சிறிதுமில்லை. கொஞ்ச நாள் வரைதான் ஜர்மானிய வீரந்துள்ளும். பின் பல்லைப் பிடுங்கப்பட்ட பாம்புபோல் பெட்டியில் இருக்குமிடம் தெரியாமல் ஒரு மூலையில் விழுந்துகிடக்கும். நாளாக நாளாக அது நிச்சயம். மேலும் மார்ச்மாதம் முதல் எந்த வியாபாரக்கப்பலையும் கவனியாது சுடு தல் என்று விளம்பரப்படுத்திய அந்த ஜெர் மனியின் எண்ணமே அதற்கு அறிகுறியா கும். சண்டையில் ஸம்பந்தப்படாத நாவாய் கடல்மேல்கிடக்க ஜர்மனிகண்டால் சுடுவ தாக வெளியிட்டதும், அந்நாடு மற்றெந்த நாடும் தன்னிடம் அநுதாபங் கொள்ளாதிரு க்கும்வண்ணம் அஸ்திவாரம்போட்டு விட்ட தென்றே கருதவேண்டும். பர்ஷியா முத லிய ஸமாசாரக் கப்பல்களையும், போரில் ஸம்பந்தப்படாத ஆட்களைக்கொண்டு செல் லும் கப்பல்களையுஞ் சுடும்படியாக எந்த நாடு இடம் தரும்? ஸமுத்திரத்தின்மேல் கொள்ளைபறிக்கும் ஜர்மானிய கடற் சைன் யம் இவ்வாறு செய்வதால் விரைவில் நாச மடையும். கெடுவான் கேடுநினைப்பானல்ல வா?

***

கனம் அப்துல் ரஹீம் அவர்கள் மஹம் மதிய வித்தியா பொதுஸங்க அக்கிராஸனம் வஹித்தபொழுது பேசியதைப் பற்றிப் பின் விரித்துரைப்பதாக முன்சொல்லப்பட் டதல்லவா? என்ன உண்மையாக அவர் பேசியிருக்கிறார்? இந்தியாவில் படிப்பில் ஏழ்மை விளங்குவதைப்பற்றி நமக்கு ஒரு வர் சொல்லவும் வேண்டுமா? படிப்பின்மை யால் அல்லவா நம்மவர் பல தவறான வழக் கங்களிலும் அவைதிக மார்க்கங்களிலும் நுழைகிறார்கள். தமது கௌரவத்தைக் கவ னியாது, தலைகிழாக அவர் நடப்பதுமதனால் தான் அல்லவா? இவ்விஷயங்களைத்தான் அவர் நன்றாக விரித்து விளங்கவைத்

திருக்கின்றனர். இராஜாங்கத்தாரும் மேற்படி விஷயங்களில் கவலை கொள்வதாகவும் அவர் சொல்லியிருக்கிறார். எழுதவும் படிக்கவும் கணக்குப்பார்க்கவும் தகுந்த ஆரம்பப் படிப்பை யாவருமடையும்படியாகக் கவர்ன்மெண்டார் ஜனங்களைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்றவர் சொல்லியது யாவர்தான் ஸரியன்றெனச் சொல்வார்? ஷை விஷயத்தை ஒரேமுறையில் இந்திய நாடுமுழுதும் கட்டாயப்படுத்துவதில் ஸந்தர்ப்பம் ஏற்படும்படி காலஞ்சென்ற ஸ்ரீகோபாலகிருஷ்ண கோகலே சில வருஷங்களுக்கு முன்பு ஓர் மசோதா சட்டம் கொண்டு வந்தனர். நமது துரதிருஷ்டம்! அது அங்கீகரிக்கப்படாது போயிற்று. இப்போது கனம் ரஹீம் அவர்கள் உரைத்தபடி முனிஸிபாலிடிகளை, படிப்பு விஷயமாக வரி ஏற்படுத்தி, வரும் வருமானத்தைக்கொண்டு, பாலபோதனையை முனிஸிபாலிடிகளில் கட்டாயப்படுத்தும்படி கவர்ன்மெண்டார் ஏற்படுத்துவது, அதனால் ஜனங்களுக்குண்டாகக்கூடிய நன்மையைப் பரீட்சிப்பதற்குத் தக்க இடந்தரும். ஏழை ஜனங்களுக்குப் படிக்கவேண்டுமென்ற ஆவல் இருக்கிறது; போதிய பணமில்லை. ஆனால் தக்க உதவியோடு அவர்களைப்படிக்கும்படி கட்டாயப்படுத்துவது பழம் நழுவிப் பாலில் விழுவதேயாகு மல்லவா?

***

திருசிராப்பள்ளி ஜில்லா ஜட்ஜியாகிய ஹார்டிங் அவர்களை ஓர் சித்தபிரமை கொண்டவன் மார்பில் குத்திக்கொன்ற கொடுமையை எவ்விதங் கூறலாகும்? யாவரிடமும் அன்போடு விளங்கி வந்த அவர், வருவதையுணராது, கச்சேரியுட்செல்ல வண்டியிலிருந்து இறங்கியபொழுது, பக்கத்திலிருந்து "இஸ்மேல்" என்னும்பேர்கொண்ட பித்தனால் கொலையுண்டதை நினைக்கும்போது "மணமகனே பிணமகனாய், மணப்பறையே பிணப்பறையாய்" என்று ஆரம்பிக்கும் திருவிளையாடல் பாடல் தானே மனத்திற்கு வரும். நிற்க. பல இடங்களிற் சென்று, தனது பிரியாதைக் எடுத்துக்கொள்ளாமையால் ஆக்ரோஷமும் பித்தமும் உற்று, மயக்க மிகுதியால் அவ்விஸ்மேல் கொடியன், ஹார்டிங் அவர்களிடம் கச்சேரி வாசலில் பிரியாதைக் கொடுக்கவர, அவர், ஸரியான வழியாக அதை அனுப்பும்படி ஆணையிட்டனர். சித்தப்பிரமைலிருந்த இஸ்மேல் நியாயஸ்தத்தில் வந்தும் நியாயமேற்படுவதசாத்தியமானதாகச்சில புத்திஹீனர்கள் தவறான அபிப்பிராயங் கொள்வதுபோல், பித்தந்தலைக்கேற, தன்னைமறந்து, உயிர் மீது பற்றில்லா முரடனாய், ஒரு தவறும் செய்யாத ஹார்டிங்கைக் கொன்றதோடிருக்கவில்லை. போலீஸ்காரர்களையுந் தாக்கி, ஜெயிலில் காவலாளையுந் தாக்கி உயிர்ச் சேதம் செய்தனன். பின் ஓர் போலீஸ் சேகவனால் கையிற் சுடப்பட்டு ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோகப் பட்டதாகத் தெரிய வருகிறது. அவன் கதி தெரிந்தேஇருக்கிறது. நாம் விவரிக்கவேண்யடிதில்லை.

பாவம் ஹார்டிங் அவர்களின் மனைவியும் குழந்தைகளும் இருந்தாற்போல் இடிவிழுந்தாற்போல, இந்த பெரும் ஆற்றமுடியாத துன்பத்திற் காளானதை நினைக்க துயர் நமக்கே விம்முகிறது. அவர்களுக்கெப்படியிருக்கும்? நமது அநுதாபத்தை அவர்பால் தெரிவிக்கிறோம்.

***

தற்காலம் நடக்கும் பெரும்போரின் பலனாக ஜர்மானியரது வியாபாரம் முறியடிக்கப்பட்டதால், வேறு தேசங்கள் தமது வியாபாரங்களைச் பரவச் செய்யத்தக்க ஸாதனங்களை ஏற்படுத்திக்கொண்டு இந்தியக் கடைகளைத் தமது ஸாமான்களால் நிறப்புகின்றன. இது நமக்கு க்ஷேமம் அல்ல. இந்த ஸமயம் விட்டால், நமது வியாபாரத்தையும், தொழிலையும், வேறு விதமான அன்ய நாடுகளால் நாமடையும் பொருள்களை நாமே செய்தலையும், கைக்கொள்வதற்கு வேறு ஸமயங் கிடைக்காது. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவேண்டும். கிடைத்த ஸமயத்தை விட்டுப் பின் ஆ! என்று ஆங்காத்திருப்பது எதற்கு? பிறரிடம் நமது வியாபாரம் போகாது நடவடிக்கைகளை நாம் ஏற்படுத்தினாலன்றி தேசம் க்ஷேமம்அடைவதெப்படி? இராஜாங்க உதவியையே நாடிக் காத்திருப்பது மிக்க தவறு. நாம் நமது நன்மைக்குத் தக்கவிதம் நடந்தால்இராஜாங்

கத்தார் தாமே உதவி செய்வார் என்பது திண்ணம். நாம் அஜாக்ரதையாக இருப்பது அழகல்ல. ஸமயப்போக்கை நாடி நமது நாட்டில் இப்பொழுது ஜப்பானியர் பலவித வேடிக்கைச் சாமான்கள், சோப்புகள், கண்ணாடிச் சாமான்கள், நெருப்புப் பெட்டிகள் முதலிய சாமான்களை நமது நாட்டுக்கடையெங்கு நிரப்பி நமது வருமானத்தை எல்லாம் தமதாக்கிக்கொள்ளுகிறார்கள். இதைப் பார்த்தும் நாம் சும்மா இருப்பது மடமையிலு மடைமை. கண்கெட்ட பிறகா ஸூர்ய நமஸ்காரம் செய்வது?

⁂

என்ன கஷ்டம்! நமது நாட்டு ஏழை ஜனங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வெளிநாடு சென்று படும் பாட்டை நினைக்க நினைக்க ஒவ்வொரு இந்தியனுக்கும் மீசை துடிக்குமல்லவா? கனம் ஹார்டிஞ்சு பிரபு அவர்களின் ஆதரவினால் கலோனியல் கவர்ன்மெண்டார் ஏதோ வழிக்கு வந்ததாக நினைத்து ஸந்தோஷித்தாலும், அனுபவத்தில் சட்டம் ஒருவிதமும், நடவடிக்கை ஒருவிதமுமாக இருப்பதாகத் தெரியவருகிறது. பிஜி (Fiji) என்னும் த்விபத்தில் நமது ஜனங்கள் படும்பாட்டை டாக்டர் மனிலால் என்பவர், "மாடர்ன் ரிவ்யூ" என்னும் பத்ரிகையில் வெகு விரிவாக எழுதியிருக்கின்றனர். தோல் வெளுப்பில்லாப் பாவத்தால் நம்மவர் படும் பாட்டைத் தவிர்ப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது வெளிநாட்டிற்கு நமதாட்களைக் கூலியாட்களாகப் போகாதிருக்கும்படி இராஜாங்கத்தாரால் தக்க சட்டம் அமுலுக்குக் கொண்டுவந்து, அதனால் மாத்திரமே தடுக்க முடியும். அவ்விதம் செய்யாத வரையில் இக்குடிகள் இருதலைக் கொள்ளி எறும்புபோல் திண்டாடவேண்டியதுதான்!

⁂

ஸ்ரீகாசி க்ஷேத்திரம் புதியபடிப்பிற்கு இடமாகும்படி ஹிந்து விச்வவித்யாலயத்திற்குத் தமது கையால் கனம் ஸ்ரீ ஹார்டிஞ்சு பிரபு அவர்கள் அன்போடு அஸ்திவாரக் கல் நட்டனர். இத்தகைய வித்தியாலயங்கள் பன்மடங்காகத் தோன்றி இந்திய நாட்டில் தத்காலம் குறையாய் விளங்கும் படிப்பில்லா விருளை ஓட்டவேண்டுமென அவாக்கொண்டதாக அவர் வெளியிட்டனர். மேலும் ஸ்ரீகாசி ஹிந்து விச்வவித்தியாலயமென்னும் இந்திய ஸர்வகலா ஸங்கத்தில் மாணாக்கர் ஒன்றுகூடி ஒரேயிடத்தில் ஒரே உபாத்தியாயரிடத்தில் படிக்கும்படியான ஒழுக்கமுடைமை முற்காலத்திய பிரஹ்மசரியப் பழக்கத்தைத் வெளியிடும். சிறுவர்களும் ஒன்றுகூடி ஒரேயிடத்தில் படிப்பதால் வித்யாலயத்தின் லக்ஷ்யமெதுவோ அதனை நேரிலேயே அடையமுடியும். மதப்படிப்பும், ஒழுக்கமும் அவ்விடம் கவனிக்கப்படுவதால் மனத்தின் விசாலத்திற்கோர் குறையுமில்லாது, மதாபிமானம் முற்றி, வேறுமத வெறுப்பின்றி, ஸமநோக்கங்கொண்டு, மாணாக்கர்கள் உயர வழியுமுண்டு. இந்திய நூல்கள் செல்லரித்துப்போவதொழிந்து, மாணவர் கையின்வாய்ந்து, பலநாட் புதைபொருள்களை, யாவருமறிய ஸாதனங்களேற்பட்டு, பல சாஸ்திரசர்ச்சையும், பரிசீலனமும் கொண்டு முன்னதைப் புதிப்பித்து, இந்நாட்டு மத, சாஸ்திர, சிற்பாதி நூல்களை வெளியிட்டும், மேல்நாட்டாரது நூலையும் ஆராய்ந்தும், இரண்டும் ஹிதமாக உலகிற்கு விளங்கும்படி செய்ய இந்த வித்யாலயம் ஜன்மஸ்தானமாகுமென நம்புகிறோம். நிற்க, வித்யாலயத்தின் அஸ்திவாரக்கல் நட்டபோது "ஹிந்து ஸமூஹத்தின் வாழ்க்கையிலும், எண்ணங்களிலும் சிறந்தவை எவையோ அவையும்; ஹிந்து மதத்திலும், ஸாம்பிரதாய வழிகளிலும் சிறந்தன எவையோ அவையும்; ஹிந்துக்களின் பழக்கவழக்கம் நாகரீகம் இவற்றில் உயர்ந்தன எவையோ அவையும்; இவை எல்லாம், கூடிய சீக்கிரத்தில் சாவதானமாக விளங்க, இவ்வித்தியாலய விருக்ஷம் வளர்க்கப்படுமென்றும், அந்த விருக்ஷம் தனது இயற்கை நாட்டில் பலமாக ஆழ்ந்த வேரூன்றி, மேல்நாட்டுச் சிறந்த சாஸ்திர சித்ர போதனாதி ஸாரத்தையுமுண்டு, கப்புங்களையுமாகப் பரவி யாவர்க்கும் பலனைத் தருமென நான் விரும்புகிறேன். அப்பொழுதுதான் சிறுவர் தூய்மையு மேன்மையும்பெற்றுத் தமது தாய் நாட்டின் மேன்மைக் குழைத்துத் தமது நாட்டுவளத்தை வளர்ப்பவராவார்" என

அவர் சொல்லிய மொழிகள் எவர் மனத்தை விட்டகலும்? கரும்புதின்னக்கூலியும் வேண்டுமா?

⁂

"மாதாவை ஒருநாளு மறக்கவேண்டாம்" என்றுள் ஔவை மூதாட்டி. இந்திய மாதாவை எந்நாளு மறக்கவேண்டாமென்றுசாஸ்திரப் பிரவிணராகிய டாக்டர் பி. ச. ராயர் (Dr. P. C. Roy) கூறிய மொழிகள் யாவர்க்குமேயாம். மேற்சொன்ன விஷயத்தைப் பற்றி ராயர் அவர்கள் ஸ்ரீகாசி விச்வ வித்தியாலய அஸ்திரவாரக்கல்லை நாட்டிய போது பேசியது. அதை நமது மித்ரர்களுடைய பிரயோஜனத்திற்காக அடுத்த போதினியில் வெளியிடப்படும். இடமில்லாமையே இதற்குக்காரணம். ஆனைக்கும்அடிசருக்குமல்லவா?

⁂

கோவாபரேடிவ் ஸங்கங்கள் வரவர விருத்தியாவது யாவர்க்கும் நன்மையே. அதன் மூலமாக ஜனபிப்ராயமும் ஸங்கமும் விருத்தியாக நல்ல இடமுண்டு. தத்காலம் கோவாபரேடிவ் ஸங்கத்தார், அங்கத்தினர்க்கு வேண்டியதாயிருக்கும் அரிசி முதலிய சாமான்களைச் சேகரித்து விற்பதிலும், ஏழைகளுக்குப் பூமியின்மேல் கடன் கொடுப்பதிலுமே கவனம் செலுத்து கின்றனர். கூட்டுறவு சங்கங்கள் எத்தனை வகையாக இருக்கின்றனவோ அத்தனையும் தேசத்திற்கு நல்லதே. முக்கியமாக ஒன்றில் அச்சங்கத்தினர் கவனம் செலுத்துவது மிக உயர்ந்த நன்மையைத் தரக்கூடியது. தத்காலம் பட்டணங்களில் விடில்லாது, விட்டுக்காரர்களுடைய மனம்போன விம்பிற்குட்பட்டுத் திண்டாடும் எளிய ஜனங்களுக்கு உதவி செய்ய அவர் முயற்சிசெலுத்தல் பெருதவியாகும். இந்த விஷயமாகப் பணஞ் சேகரித்துக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி, விடுகளை சில ஒழுங்குபடி கட்டி, நியாயமான குடிக்கூலிக்கு விடுவது மிக்கப் பிரயோஜனத்திற் கிடந்தரும். நினைத்தாற்போல காரணமின்றி விட்டுவாடகையை யுயர்த்தும் விட்டுக்காரர்களுடைய கர்வத்தையும் ஒருவாறு அது அடக்கும். முக்கியமாகச் சென்னைநகரத்தில் அது அத்யாவசியகம். ஏழை சொல் அம்பலமேறுமோ?

மதுபிந்து கலகம் என்று முன் நடந்ததாகச் சிறுகதைகளில் முற்காலத்துச் சிறியோர்கள் படித்திருக்கலாம். தத்காலம் கல்கத்தா இராஜாங்கக் கல்லூரியில் நடந்த ஸம்பவங்களைக்கவனித்தால்அது ஞாபகத்திற்கு வராதிராது. சிறுவர்களைச் சரி ஸமானஞ் செய்வதால் வரும் பிரமாதத்தை அது யுணர்த்தும். உலகத்தினுள் அடக்கம், பயம், பக்தி, விச்வாஸம் இவைகளிற் சிறந்து, துன்மார்க்கப் பிரவர்த்தியில் போகுந்தன்மை இல்லாத நமது இந்திய பாலர்க்கு அயல்நாட்டுச் சிறுவர்போல் துஷ்டகுணமடையும்படி செய்வதற்கு ஏதாவது பிரமாதமாக அவர் மனதைத் தூண்டும்படியான அற்பமான விஷயம் இருக்குமல்லவா? இதற்கு உபாத்தியாயர்களாக வரும் ஐரோப்பியர்கள் இந்திய பழக்க வழக்கங்களில் ஞானனுபவமில்லாமையும், இந்தியச் சிறுவர்களிடம் சிலர் அலட்சியமாக நடப்பதுமே காரணங்களாகும். சிறுபிள்ளை லக்ஷணம் உலகமுழுதுமொன்றே. அதைக் கவனியாது நடப்பது பக்குவமற்ற ஞானத்தை யுணர்த்தும். பிச்சைக்காரன் மேலா பிரம்மாஸ்திரம் விடுவது? பிள்ளை வருத்தம், பெற்றவளுக்கல்லவோ தெரியும். மற்றவர்களுக்குத்தெரியுமா? உபாத்தியாயர்களும் சிறுவர்களுமிணங்க இரண்டு பக்கங்களிலும் ஒழுக்கம் வேண்டும். இல்லையேல், பிள்ளையார்பிடிக்கக் குரங்காய் முடிந்து விடும்.

---

நீரளவே யாகுமா நீராம்ப லுன்கற்ற
நூலளவே யாகுமா நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வங்
குலத்தளவே யாகுங் குணம்.

சாந்தனையுந் தியனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

[திற்

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம்வேழத்
பட்டுருவங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S AND LADIES' PAGES

# மாதவீகங்கணம்

### அத்யாயம் 8

(265-ம் பக்கத்தொடர்ச்சி.)

மந்த்ராலோசனை மண்டபம்

உடனே ப்ருத்விராஜர் தன் ஆஸனத்தை விட்டெழுந்து சக்ரவர்த்தியவர்களுக்குத் தலைவணங்கி "மஹாராஜா, க்ஷத்ரியவம்சங்களுள் முதன்மை வஹித்திருக்கும் மீவார் ராஜ குடும்பத்தினருக்கு மரியாதை செய்வதற்கு ப்ரதி க்ஷத்ரியனும் முன் வருவான். ப்ரதாபஸிங் புத்ரருக்குச் சக்ரவர்த்தியவர்கள் அனுப்பும் நிருபத்தை அடியேன் எடுத்துச் செல்ல கருணை புரியவேண்டும்" என்றார்.

"ராஜபுத்ர ஸிம்ஹமே, அப்படியே நீரே எடுத்துச் செல்லலாம். உம்மைவிட ப்ரதாபஸிங்குக்கு அதிகமாய் வேண்டியவர் ராஜஸ்தானம் முழுவதிலும் வேறெவருங் கிடையாது. அவரைப்பற்றிப் புகழ்ந்துரைப்பதே உமக்கு ஓர் ஆனந்தமாய்விட்டது. நாம் அனுப்பும் செய்தியை நீர் எடுத்துச்சென்றால் அது அமர்ஸிங்குக்குச் சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்ததுபோலிருக்கும். நமது ஸமஸ்தானத்திலிருந்து உமக்கு இஷ்டமானவர்களைக் கூட அழைத்துச் செல்லலாம்."

"ராஜாமான்ஸிங் உத்தரவு கொடுத்தால் அவர் கீழிருக்கும் கஜபதிஸிங்கை அழைத்துச் செல்வதில் எனக்குப் பரம ஸந்தோஷம். அவர் ஜோத்புரி ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர். எமது பிகானீர் வம்சத்துடன் ஸம்பந்தம் செய்திருக்கிறார். நானும் அவரும் பால்ய நண்பர்கள். பின்னாடியும் அதிகமாய் ஒருவரைவிட்டொருவர் பிரிந்ததில்லை. ஆதலால் இப்போதும் நாங்களிருவரும் ஒன்றாய்ச்செல்ல உத்தரவு அளிக்கவேண்டும்."

மான்ஸிங் சுளித்த முகமாய், "என் கீழ் இருப்பவர்கள் சக்ரவர்த்தியவர்களுடைய ஸேவகர்களே. சக்ரவர்த்தியவர்கள் கஜபதியைப் போகவேண்டுமென்றால் நான் என்ன தடைசொல்லப்போகிறேன்? கஜபதி நல்ல தைர்யசாலி. அவன் இத்தொழிலை ஸரிவர நிறைவேற்றுவான்."

சக்ரவர்த்தியவர்கள் ஆஸனத்தை விட்டெழுந்து, "ஸரி, கஜபதியும் உடன் செல்லட்டும். அவருடன் அவருடைய நண்பராகிய நரேந்த்ரனும் கூடச்செல்லலாம்" என்றார்.

மந்திரிமார்கள் யாவரும் சக்ரவர்த்தியவர்களுக்கு வந்தனஞ்செய்து செலவு பெற்றுப் போயினர். கடைசியில் நரேந்த்ரன் வந்தான். சக்ரவர்த்தியவர்களுக்கு வந்தனஞ் செய்யும்போது, அவர் கடைசியாய்த் தன்னிடம் காட்டிய அன்பைக்கண்டு ஆனந்தங்கொண்ட நரேந்த்ரனுக்குக் கண்களில் நீர் ததும்பிற்று. அக்பர் பெருமான் தன்மீது இவ்வளவு தயை வைப்பாரென அவன் கனவில்கூட எண்ணியதில்லை. சக்ரவர்த்தியவர்கள் அவனுடைய உள்ள நிலைமையை அறிந்து தன் மகனிடம்போல் பரிவாய்ப் பேசலானார்.

"நரேந்த்ரநாத் ராய், நீ உன்னிஷ்டப்படிக்கு ராஜஸ்தானம் செல்லலாம். தாமஸம் வேண்டாம்; கார்யம் ஜடுதியில் ஆகவேண்டும்" என்று சொல்லிப் பின்னும் பேசலுற்றார். "ஆக்ரா கோட்டையைவிட ராஜஸ்தானமே உனக்கு இப்போது பத்ரமான இடம். ஆக்ராவில் தார்த்தரிப் பெண்களுடைய மோகவலை லேசானதன்று; அதற்குத் தகுந்ததுபோல் பேடிகளுடைய க்ரூரமும் ஸஹிக்கக்கூடியதன்று."

கடைசியாய்த் தாழ்ந்த த்வனியில் அக்பர் கூறிய மொழிகளைக்கேட்டு நரேந்த்ரன் இடிவிழுந்தவன் போலானான். அவனுக்குத் தன் ப்ரஞ்ஞைவரச் சிறிது நேரமாயிற்று. அதற்குள் அக்பர் போய்விட்டார்.

### அத்யாயம் 9

அக்பர்—அபுல்பாஸலும் படோனியும்

"அபுல்பாஸல், இன்றைக்குப் பகலெல்லாம் வேலை நிரம்ப இருந்தது. என்பாடு ஜாஸ்தி களைத்துப்போய்விட்டது. உமது ஸஹோதரர் இயற்றிய இனிமையான கீதங்களில் இரண்டொன்றை யெடுத்துப் பாடினால் கேட்கலாம்போலிருக்கிறது."

அப்போது அர்த்தராத்ரி. அக்பர் தன் நண்பர்களிருவருடன் யமுனாநதி தீரத்திலுள்ள அரண்மனையின் ஓர் அறையில் உட்கார்ந்திருந்தார். ஜன்னல்கள் வழியாய்ச் சந்த்ரகாந்தி ப்ரகாசித்துக்கொண்டிருந்தது; அடுத்தாற்போல் கீழே யமுனையாற்று ஜலம் கோட்டைச் சுவர்களின்மீது மோதும் சப்தம் மந்தமாய்க் கேட்டுக்கொண்டிருந்தது. அறைமுழுவதும் சுற்றுப்பக்கத்துத் தோட்டங்களிலுள்ள செடிகளில் புஷ்பித்திருக்கும் மலர்களின் நறுமணம் கம்மென்று வீசிக்கொண்டிருந்தது. அறைக்குள் சந்த்ரவொளியில் பளபளவென்று ஜ்வலிக்கும் பளிங்குச் சுவர்களின் பக்கமாய் ம்ருதுவான ஆஸனங்கள் போடப்பட்டிருந்தன. அறையின் மேற்கூரையில் விசித்ர புஷ்பங்கள் வரையப்பட்டிருந்தன. அக்பர் ஸாயந்த்ரம் சிறிது அன்னம் புசித்துவிட்டுச், சயனக்ருஹம் செல்லுமுன் ஒரு மணி காலம் தனது விருந்தாளிகளிருவருடன் ஸம்பாஷணை செய்ய எண்ணங்கொண்டு இவ்வறைக்குள் வந்தார்.

அந்த இரண்டு விருந்தாளிகளுள் ஒருவர்தான் அபுல்பாஸல். இன்னொருவர் கல்வியிலும், எழுதும் வன்மையிலும் அபுல்பாஸலுக்கு இணையான படோனி என்னும் சரித்ராசிரியர். அவர் அதிக வைதிகர். வீரசைவர்கள், வீரவைஷ்ணவர்கள் என்பதுபோல் அவர் வீரமுஸல்மான். இந்த அறைக்குள்வர எல்லோருக்கும் அனுமதி கிடையாது. அக்பருடைய ஆப்த நண்பர்கள் எனச்சொல்லப்படுபவர்களுக்குள் வெகு சிலரே இந்த அறைக்குள் உட்கார்ந்து அக்பருடன் ஸம்பாஷிக்கும் பேற்றைப் பெற்றவர்கள். அவர்களுள் பிர்பால் என்பவர் ஒருவர். அவர் தமது விகடவார்த்தைகளால் பல தினங்கள் இவ்விடத்தில் அக்பருடைய மனக்கவலையைப் போக்கி அவரை ஸந்தோஷிப்பித்துள்ளார். இவ்வறையில் ப்ருத்விராஜரும் அநேகமுறை தமது ஜன்மபூமியாகிய ராஜஸ்தானத்துக் கீதங்களைப் பாடி அக்பரை மகிழ்விப்பதுண்டு. கிறிஸ்தவப் பாதிரிகளும், மகம்மதிய முல்லாக்களும், ஹிந்து பண்டிதர்களும் தத்தம் மதங்களின் மேன்மைகளை எடுத்துக்கூறிப் பொழுது விடிவது தெரியாமல் ஒருவருடனொருவர் அக்பர் முன்னிலையில் வாதாடுவதுமுண்டு. ஆனால் அன்றிரவு அவர் மனது அவைகள் எவற்றின்மீதும் செல்லவில்லை. அவர் சற்றுநேரம் நிச்சிந்தையாயிருக்க விரும்பினார். அந்த்ய காலத்தில் அவருடைய மனக்கவலைகளை மாற்றத்தகுந்த யோக்யதை பெற்றிருந்தவர் அபுல்பாஸல் ஒருவரே. ப்ரதி இரவும் அவர் அக்பர் பக்கம் உட்கார்ந்து அவருடைய எல்லையற்ற மனோவேதனைகளைத் தம்மாலானமட்டும் ஸமாதானப்படுத்திவந்தார்.

"பாய்ஸி இருந்தமட்டும் அவர் தம் கர்ணாம்ருத கீதங்களால் என்னை மகிழ்வித்து வந்தார். அக்கீதங்களில் இரண்டொன்றை நீர் பாடும். அல்லது உமது ஸொந்த கீதங்களையாவது பாடும். உமது கவிகளில்போல் ஆழ்ந்தயோசனையும், ச்ருதாம்ருதமான பதங்களும் ஒன்றுசேர்ந்து வேறெவருடைய கவிகளிலும் காணப்படுவதில்லை."

அபுல்பாஸல் அவருடைய கீதங்கள் சிலவற்றையெடுத்துப்பாடினார். அவற்றின் தாத்பர்யம் பின்வருமாறு:—

"என்னை உண்மை அன்புடன் நேசித்த எனது ஆதிகாலைய நண்பர்களெல்லாம் ஒவ்வொருவராய் இவ்வுலகைவிட்டு அகன்றனர். நான் எவர் துணையுமின்றித் தன்னந்தனியாய் இந்த அகண்ட அந்தகார வழியில் செல்கின்றேன்.

"இவ்வுலகெல்லாம் எங்கு பார்த்தாலும் எண்ணிறந்த ஜனங்கள்; காடு, மலை, நாடு, நகரங்கள் எல்லாம் ஜனக்கூட்டமாயிருக்கிறது. இருந்தென்ன? ஸமுத்ரமெல்லாம் ஜலமிருந்தாலும், குடிக்க ஒரு துளி நீர் உதவாததுபோல், இவ்வகண்ட புவியில் ஒருவித குற்றங்குறையுமின்றி நிர்த்தோஷியான மனிதனைத் தேடித் தேடிப் பார்த்தலைந்தேன்; ஒருவரையுங் காணேன்."

"நீ என்ன தேடினாலும் அகப்படுவது கஷ்டம். ஒருவேளை வெகுகாலம் தேடினால் அகப்படுவானோ என்னமோ? தெரியாது. நிர்த்தோஷியானவன் இவ்வுலகில் அகப்படுவது அரிது. உமது கவியிலுள்ள ஆழ்ந்த கருத்துக்கிணை இக்காலத்துக் கவிகளில் கிடையாது. புராதன கவிதாக்களின் நூல்களை ஆராய்ந்தால்தான் அகப்படும்."

"ஸ்வாமீ, நமது முன்னோர்கள் ஸதா ஈசுவரனது ச்ருஷ்டிகளினிடமே அன்பு வைத்து அவைகளைக்கொண்டே தமது அறிவைத் தீட்டிவந்தனர். அவர்கள் அவைகளின் ரஹஸ்யங்களை நுட்பமாய் க்ரஹித்தவர்கள். நாம் இப்போது இருப்பது மனிதன் நிர்மாணம் செய்த உலகம். இப்போது நகரங்களும் நகரக்காட்சிகளும், ஆடையாபரணங்களுமே அதிகரித்துவிட்டன. ச்ருஷ்டியின் இயற்கையழகைக் கவனிக்கும் வழக்கமே போய்விட்டது. இதுதான் இதற்குக் காரணம்."

"நமது ப்ரஸித்திபெற்ற பர்டோஸியவர்களுடைய கவிகள், ஹிந்துதேசத்து இதிஹாஸபுராணாதிகள்—இவற்றிற்கு இணையான க்ரந்தங்கள் ஏதேனும் நமது காலத்தில் ஏற்பட்டிருக்கிறதா?"

"எதுவுமில்லை. நமது காலத்து நூல்கள் புதிதாய் மலர்ந்த புஷ்பத்தைப்போல் கொஞ்சகாலம் நறுமணத்துடனிருந்து சீக்ரத்தில் வாடி யுலர்ந்துபோகின்றன. ஆனால் இந்தியா, பாரஸீகம் இந்நாடுகளில் பூர்வத்தில் இயற்றப்பட்ட க்ரந்தங்கள் இமயமலையடி தேவதாரு வ்ருக்ஷங்களைப்போல் கற்பாறைக்குள் வேரூன்றி பல்லாண்டு பல்லாண்டுகளாக ஜீவித்துவருகின்றன."

"இருந்தாலும் நமது அகண்ட ராஜ்யத்தில் ஸாஹித்ய துறையில் இரண்டொரு க்ரந்தங்களாவது அல்லது கீதங்களாவது மார்க்கண்டேய நிலைமையை அடையும் என்று நான் எண்ணுகிறேன்."

"அடையலாம். ஆனால் நம்முடைய ஸமஸ்தான நூல்கள் ஒன்றும் அவ்வித பாக்யம் பெறமாட்டா. ஸாமாந்ய ப்ரஜைகளுக்குள் வழங்கும் பாஷையில் இயற்றப்படும் நூல்களுக்கு அந்தப் பெருமை உண்டாகும். நமது ஸமஸ்தான பாஷை பாரஸீக பாஷை. நமது அரண்மனையில் தவிர்த்து வெகுசிலரே அந்தப் பாஷையை வழங்குகின்றவர்; ஸாமாந்ய ஜனங்களுக்கு அதன் பெயரே தெரியாது. நல்ல பளிங்குத் தொட்டியில் வைத்து வளர்த்த செடியில் உண்டாகும் புஷ்பத்தின் அழகைக்கண்டு களிப்பது ஒரு நாள் காலம்தான். மறுநாள் அது வாடி விடுகின்றது. இந்தப் புஷ்பத்தையொத்தவை நமது ஸமஸ்தான நூல்கள். ஆனால் ஜனங்களுடைய நூல்களோ, காட்டில் ஸ்வேசசையாய்ச் செழிப்பாக வளர்ந்து ஆகாயத்தை ஊடுருவி நின்று உலகத்தோர் அனைவருக்கும் நிழல் கொடுத்து ரக்ஷிக்கும் ப்ரஹ்மாண்டமான வ்ருக்ஷங்களுக்கு நிகரானவை.

"ஏன், ஹிந்துக்கள் கூட நமது பாஷையை எழுதப்படிக்கக் கற்றுக் கொள்ளுகிறார்களாமே. நமக்குத் தெரிந்ததுபோல் அவர்களுக்கும் பாரஸீக பாஷை தெரியும் என்று கேள்விப்படுகிறேன். ராஜா தோடர்மால் அவர்கள் இந்தியா முழுவதும் பாரஸீக பாஷையை ராஜ பாஷையாக அநுஸரிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிற விஷயம் உமக்குத் தெரியுமே."

"ஹிந்துக்கள் மஹா புத்திசாலிகள். அவர்கள் ராஜ பாஷையை எளிதில் கற்றுக்கொண்டு விடுவார்கள். ஆனால் அவர்கள் தமது எண்ணங்கள், யோசனைகள் அனைத்தையும் வெளிப்படுத்துவது அந்த பாஷையிலன்று. தம் தாய்ப்பாலுடன் சிறிது சிறிதாய் உட்கொண்ட தாய்ப்பாஷையில்தான் அவர்கள் எழுதுவது, பேசுவது யாவும் நடக்கின்றன."

"அப்படியானால் அவர்கள் தம் தாய்ப்பாஷையில் சிறந்த கீதங்கள் ஏதாவது இயற்றியிருக்கின்றனரா?"

"ஸூர்தாஸ், கேசவதாஸ் இவர்கள் இயற்றிய கீதங்களை ஜனங்கள் அம்ருதமாகப் பானம்செய்யும் விஷயம் தங்களுக்குத்தெரிந்ததே. துளஸிதாஸ் என்னும் மஹான் ராமாயண சரித்ரத்தைத் தமது ஸ்வயபாஷையாகிய ஹிந்தியில் கர்ணாம்ருதமாய்ப் பாடியிருக்கிறார். வட இந்தியா முழுவதும் ப்ரதி க்ராமங்களிலும் இவர்களுடைய பாடல்களைச் சிறியோர் பெரியோர் அனைவரும் தினந்தோறும் சிரவணம் செய்கிறார்கள். நாம், நம் ஸந்ததியார் பலர் எல்லோரும் மாண்ட பின்னரும் அந்தக் கீதங்களை ஜனங்கள் பாடிக் கொண்டிருப்பார்கள் என்பதற்கு ஸந்தேஹமில்லை."

"அபுல்பாஸல், நீர் சொல்வதெல்லாம் அதிக புத்திசாலித்தனமாயிருக்கிறது. வட இந்தியாவைப்போல் இக்காலத்தில் ஸாஹித்ய துறையில் ப்ரஸித்திபெற்ற ப்ராந்தியம் வேறு ஏதாவதுண்டோ?"

"ராஜாமான்ஸிங்கைக் கேட்டால் அவர் சொல்வாரே. வங்காளத்தில் காசிராம் என்பவர், பூர்வகாலத்துப் புராண இதிஹாஸங்களை ஸாமான்ய ஜனங்கள் பேசும் பாஷையில் பாடியிருக்கின்றார். வங்காள முழுவதும் அவருடைய கீதங்கள் தெரியாத க்ராமமே கிடையாது. இப்போது முகுந்தராய் என்றொருவர் இருக்கிறார். அவருடைய கீதங்களும் ப்ரஸித்திபெற்றவை. அவர் சிறிது காலத்துக்குமுன்னே மான்ஸிங் அவர்கள் முன் தமது நூதன கீதங்களைப் பாடினார். ராஜா அவர்கள் ஆனந்த பரவசமானார்."

"ஆம். அவர் வங்காளத்துக் கீதங்களைப் பற்றி ஸ்லாக்யமாகப் பேசியிருக்கிறார். எனக்கும் கேட்கவேண்டுமென்றிருக்கிறது. ஆனால் என்ன செய்வது? எனக்கு வங்காளி பாஷை தெரியாது. கற்றுக்கொள்ளலாமென்றாலோ வயதாய் விட்டது. வரவர ஓழிவு நேரமென்பதே அபூர்வமாய்விட்டது. எனக்கு அந்தப்பாக்யம் இராமலே போய்விடும்."

"தக்ஷிணத்தில்கூட மஹாராஷ்ட்ரர்கள் பல கீதங்கள் இயற்றியிருக்கின்றனர். ஸ்ரீதருடைய கீதங்கள் உலக ப்ரஸித்தமானவை. மஹாராஜா, இவைகள்தான் தங்களுடைய காலத்து ஸாஹித்ய ரத்னங்கள். இவைகளால்தான் தமது காலத்து நாகரிகம், எண்ணங்கள், யோசனைகள் முதலியவை பின்காலத்தவருக்குத் தெரியவேண்டும்."

"எனது கோடிக்கணக்கான குடிகள் தத்தம் பாஷைகளில் சிறந்த க்ரந்தங்கள் இயற்றி அவற்றைப் பாடிக் களிப்பதைக் காண்பது எனக்கு அதிக த்ருப்தி. அவர்களுக்குள் பல மதகுருக்களும், மதசீர்திருத்தக்காரர்களும் ஏற்பட்டு ஒவ்வொருவரும் பல்லாயிர ப்ரஜைகளைத் தமது சீஷர்களாகக்கொண்டு உலகத்தார் உய்யும்பொருட்டு உழைத்துவருகிறார்கள். நாமும் ஒரு நூதன மதஸ்தாபனம் செய்தோம். அந்த மதத்தை வெகு சிலரே தழுவியுள்ளார்."

"ஸ்வாமீ, இந்த விஷயத்தில் அந்த மதச்சீர்திருத்தக்காரர்களுடைய கருத்தும் தங்களுடைய கருத்தும் ஒன்றே. கருத்தில் யாதொரு வித்யாஸமுங்கிடையாது. ஆனால் அவர்கள் உழைப்பது ஸாமான்ய ப்ரஜைகளுக்குள்; தாங்கள் உழைப்பதோ அரண்மனைக்குள். ஸமஸ்தானத்திலுள்ள அமீர்களும், ப்ரதானிகளுமே தங்களுடைய மதத்தைத் தழுவுகின்றவர்கள். நூறு வருஷங்களுக்கு முன்னர் காசியில் ராமானந்தர் என்றொரு மஹான், கடவுள் ஒருவரே என்னும் உண்மையைப் பலருக்குப் போதித்தனர். அவருடைய சிஷ்யராகிய கபீர்தாஸனும் தங்களைப் போலவே ஹிந்துக்கள் முஸல்மான்கள் எல்லோரையும் ஒன்றேயான முதல்பொருளை வணங்கும்படிச்செய்து அவர்களையொன்றுபடுத்தவேண்டுமென்ற அவாக்கொண்டிருந்தார்."

"ஹிந்துக்களே, காசியா உமது கடவுளின் உறைவிடம்? மகம்மதியர்களே, மெக்காவா உமது கடவுளின் உறைவிடம்? அன்று, அன்று! காசியுமன்று, மெக்காவுமன்று! ஸஹோதரர்களே, உங்களுடைய மனதைத் தேடிப்பாரும். அவ்விடத்திலேயே இருக்கிறார் ஹிந்துக்களுடைய கடவுளும், மகம்மதியர்களுடைய கடவுளும். ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் வஸித்திருக்கிறார் அந்தப் பரம்பொருள்!" என்று அவர் பலமுறை போதித்தனர்.

"என்ன அருமையான கருத்து! நமது பண்டிதர்களெல்லாம் பொறுக்கிப் பொறுக்கி அலங்காரமான பதங்களை வைத்துக் கீதங்கள் பாடுகிறார்கள். அவை ஜனங்களுடைய மனதுக்கு ஆனந்தம் கொடுப்பதில்லை. முதலில் அவர்கள் அவைகளைச் செவிகொடுத்துக் கேட்பதுகூடக் கிடையாது. கபீரைப் போன்ற ஸர்வமத ஸம்மதமான மஹான்கள் வேறெவராயினும் உண்டோ?"

"பஞ்சாபில் ஒருவர் இருந்தார் நூறு வருஷங்களுக்கு முன். அவர் ஒரு பெரிய மதகுரு. அவர் பெயர் நானக். அவரும் கபீரைப் போல் ஹிந்து மகம்மதிய ஐக்யத்தை நாடியவர். அவருடைய மதத்தை ஹிந்துக்களும் முஸல்மான்களும் அவலம்பிக்கின்றனர். அவர்களுக்கு ஸிக்ஜாதியார்களெனப்பெயர். அவர்கள் மஹா தைர்யசாலிகள். நல்ல திடகாத்ரர்கள். ராஜபக்தியில் சிறந்தவர்கள்."

"அவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களெல்லாம் உண்மையான

ஒரு முதல் பொருளைப் பேதமின்றிப் பூஜிப்பதால் எனக்கு அவர்களிடம் அதிக மதிப்பு உண்டு.”

“வங்காளத்திலும் நாறு வருஷங்களுக்கு முன் சைதன்யர் என்றொருவர் இருந்தார். அவரும் ஹிந்து முஸல்மான்களை ஒன்று சேர்க்க முயன்றவர். அவர் மதத்தை தழுவினவர்கள் கணக்கற்றவர்கள்.”

“இந்த மதாசிரியர்கள் அனைவரும் ஸாமாந்ய ப்ரஜைகளைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய வாழ்க்கையும் டம்பமற்ற வாழ்க்கைதான். அவர்கள் ஸதா ஸாமாந்ய ஜனங்களுடன் உழைத்து அவர்களைச் சீர்த்திருத்தி வந்தார்கள். அதனால்தான் அவர்களுக்கு அவ்வளவு ஜயம் உண்டாயிற்று. அத்தனை சிஷ்யர்கள் ஏற்பட்டனர்.”

“எப்போதும் அப்படிதான். ஸாமான்ய மனிதர்தான் ஸாமாந்ய ப்ரஜைகளுக்குப் போதித்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வரக் கூடியவர்கள். அப்பேர்ப்பட்டவர்களுடைய பேச்சுதான் அவர்களிடத்தில் அம்பலம் ஏறும். அவர்களைக்கண்டால் ஜனங்களுக்குத் தேவதா பக்தி. இயேசுகிறிஸ்து பரமதரித்ரர்; அவர் வஸித்தது செம்படவர்களுடன்; அவர் போதித்தது அவ்விடத்தில்தான். அவர்படாதபாடுகிடையாது. அவரை மனம்போனபடிக்கெல்லாம் ஹிம்ஸித்தனர். எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டிருந்தார். கடைசியில் சிலுவையிலும் அறையப்பட்டனர். அதற்கும் அவர் வாயைத் திறக்கவில்லை. மஹா பொறுமைசாலி. முஹம்மது இருந்தாரே. அவர் கதியென்ன? மெக்காவினின்று மெடினா ஓடி உயிர் பிழைத்தார்.”

“மேனாட்டிலிருந்து நமது ஸமஸ்தானத்துக்கு வந்த கிறிஸ்தவ பண்டிதர்கள் இயேசு கிறிஸ்துவின் சரித்ரத்தை எனக்கு ஸாங்கோபாங்கமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவோ ஸஹிக்கக்கூடாத துன்பங்களையெல்லாம் பொறுமையுடன் அனுபவித்துக் கடைசியில் சிலுவைக்கு இரையாகிய அந்த மஹானுடைய சரித்ரத்தைக் கேட்கும்போதெல்லாம் எனது கண்களில் நீர் ததும்பும். மேனாட்டினர்கள் யாவரும் போர்த்துகேசியர், டச்சுக்காரர், இங்கிலீஷ்காரர் முதலியவர்கள்—அவருடைய மதத்தை அநுஸரிக்கிறார்களாம்.”

அக்பர் அபுல்பாஸலைப் பார்த்துச் சற்று நேரம் சும்மாவிருந்து மறுபடியும் “ஹிந்துக்கள் மகம்மதியர்கள் இரண்டு மதத்தினரும் பூஜிக்கும் பரம்பொருள் ஒன்றேயென்னும் ஸித்தாந்தத்தை நம்பினவர்கள் சிலர்தான் என்பது எனக்கு ஓர் அருவருப்பன்று; அந்தச் சிலர் நல்ல யுக்தி யோசனையுடைய புத்திமான்களாயிருந்தால் போதும். இன்றைக்கில்லாவிட்டால் நாளைக்கு அநுஸரிக்கிறார்கள் இதரர்கள். அதைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியது அநாவஶ்யம். நாம் விதையை விதைத்துவிட்டால் அறுவடை காலம் தானே வருகிறது. காஷ்மீரத்தை ஜயித்தவுடன் நான் ஹிந்துக்கள் மஹம்மதியர்கள் தம்முள் பேதமின்றி ஈசுவரனைப் பூஜிப்பதற்காக ஓர் ஆலயம் கட்டுவித்தேன். அக்கோவில் மதிற்சுவரில் வரையப்பட்டுள்ள வார்த்தைகளை நீர் அறிவீரன்றோ?”

அபுல்பாஸலுக்கு அம்மொழிகள் குருட்டுப் பாடமாகத் தெரியும்.

“எத்திசை நோக்கினும் எவரைக் கேட்பினும் யாவரும் உன்னையே நாடுகின்றனர். எப்பாஷை வழங்கினும் அப்பாஷையில் அனைவரும் உன்னையே புகழ்கின்றனர். நம்பினோர் நம்பாதோர் யாவரும் நாடும்பொருள் நீயே. பரம்பொருள் நீ ஒன்றே. இரண்டற்றவன். எம்மதம் தொடரினும் யாவரும் கடைசியில் உன்னையே அடைகின்றனர். மசூதியிலும் ஆலயந்தனிலும் கூடிப் பலவேறு விதமாய்ப் பல்லாயிரம் பெயர் நாடும் வஸ்து உன்னையன்றி வேறெதுவுமில்லை. மசூதி சென்றால் அங்கு விளங்குபவனும் நீயே. யாவரும் நாடுவது நினது கடாக்ஷமே. நானும் தேடியலைவது உனதருளே. ஆஸ்திகன் நாஸ்திகன் எவனுக்கும் நீ உனது நிஜஸ்வரூபத்தை வெளியிடுவதில்லை. தம் தம் மதத்தையே தழுவித் தனித்தனியாய்ப் பூஜித்தாலும், நிஜபக்தனது ஹ்ருதயத்தில் நர்த்தனம் புரிகிறாய் ஈசனே.”

“அடியேனுடைய உள்ளத்திலும் அவர் எழுந்தருளி அடியேனைக் காத்தருள் நாள் என்றைக்கோ? தமது அடியேனை இவ்வுலகத்தில் அவர் தமது ப்ரதிநிதியாக உழைக்

கும்படி ஆஞ்ஞாபித்திருக்கிறார். படோனி என்னமோ அதிருப்தியாகத் தலையை ஆட்டுகிறாரே. நண்பரே, நீர் உமது மனதி லுள்ளதைத் தாராளமாய் எடுத்துச் சொல்லலாம். அபுல்பாஸல் அவற்றிற்கேற்ப விடையளிப்பார். நீங்கள் இருவரும் நல்ல புத்திமான்கள். உமது வாதத்தைக்கேட்டு நானும் சிறிது பலன் பெறலாம். இப்படிப் பெரியவர்களுடைய ஸம்பாஷணை, வாதம் முதலியவற்றைக் கேட்டதில் எனக்குப்பிரியம் அதிகம்."

"நான் பாரஸீகம், அரேபியா எகிப்து முதலிய பல நாடுகளின் சரித்ரங்களைக் கவனமாய்ப் படித்திருக்கிறேன், அவ்விடமிருந்து வந்தவர்களிடமிருந்து கேட்டுமிருக்கிறேன். எல்லாவிடங்களிலும் இஸ்லாம் மதமே அநுஸரிக்கப் பட்டுவருகிறது, அவ்விடங்களில் வேறெந்த நூதன மதமும் போதிக்கப்பட்டதாகக்காணோம்."

"நீர் உரைக்கும் நாடுகளெல்லாம் ஒரே மதத்தைத் தழுவினவை. அத்தேசங்களில் குடிகளுடைய மதமே அரசருடைய மதம்; அரசருடைய மதமே குடிகளின் மதம்; இரண்டாம் மதம் கிடையாது."

"இப்போது அவ்விதமிருக்கலாம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவ்வாறில்லையே. பாரஸீகத்தில் ஜொராஸ்டர் மதமும், எகிப்தில் வேறொரு மதமும் தழைத்திருந்தன. அவைகளெல்லாம் மகம்மதிய மதம் ஏற்பட்டவுடன் ஸூர்யனைக்கண்ட பனிபோல் மறைந்துவிட்டன, அவ்விதமே மகம்மதிய அரசர்கள் காலத்தில் இந்தியாவிலும் ஹிந்து மதம் முதலிய விக்ரஹாராதனை மதங்களெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் ஒழிந்து எங்கு பார்த்தாலும் மகம்மதிய மதமே வ்யாபிக்கும் என்று நம்பியிருந்தோம். அரேபியா, பாரஸீகம் எகிப்து இந்நாடுகள் போலவே என் இந்தியாவும் மகம்மதிய நாடாக விளங்கக்கூடாது?"

"ஸ்வாமீ, உமது மதாபிமானம் மஹா சிரேஷ்டமானது. தங்களுடைய பாண்டித்யம் ஒப்புயர்வற்றது. தங்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்றுங்கிடையாது. இந்திய ராஜ்யத்து ஜனத்தொகைக்கும் பாரஸீகம் அரேபியா எகிப்து இந்நாடுகள் ஜனத்தொகைக்கும் ஏற்றக்கோலுக்கும் அறுவாள் பிடிக்கும் போலிருக்கிறது. பாரஸீகம் முதலிய ஜனங்கள் அனைவரும் ஒன்றுகூடினும் இந்திய ராஜ்யத்துப் பதினைந்து மண்டலங்களில் ஒரு மண்டலத்து ஜனத்தொகைக்கு ஈடாகாது. இந்த ராஜ்யத்து ஜனத்தொகை கோடிக்கணக்கானது. அலக்ஸாந்தர் மகிபர் முதற்கொண்டு எத்தனையோ அந்நிய நாட்டு அரசர்கள் இந்நாட்டின்மீது படையெடுத்து வந்திருக்கின்றனர். எத்தனையோ ஜாதியார்கள் இந்நாட்டிலேயே நிலைத்துவிட்டனர். இவ்வளவு அமர்க்களங்களுக் கிடையிலும் இந்நாட்டு மதம், மதக்கோட்பாடுகள், புராணேதி க்ரந்தங்கள். முதலியன நாசமுறாமல், க்ஷீணிக்காமல் அபிவ்ருத்தியடைந்து வருகின்றன. இத்தகைய பெருமையும் உறுதியும் வாய்ந்த மதத்தை நம்மால் வேரறுத்தல் கூடுமா?"

"அபுல்பாஸல், நான் சொல்வதைச்சற்று நிதானித்து கேட்கவேண்டும். இந்தியாவைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு பெரிதான ராஜ்யங்களெல்லாம் முஹம்மதைக் குருவாகக் கொண்டிருந்தன. அவர் ஸமாதியடைந்த நூறு வருஷங்களுக்கெல்லாம் இஸ்லாம் படைவீரர்கள் ஆசியா, ஐரோப்பா, ஆப்ரிகா இந்த மூன்று கண்டங்களில் தமது மதத்தை நிலைநிறுத்தினர். பாக்டாட் காலிப்கள் காலத்தில் இஸ்லாம் மதம் எவ்வளவோ அபிவ்ருத்தியடைந்தது. இவைகளெல்லாம் அறிந்திருந்தும் நீர் இவ்வாறு பேசுவதின் பொருள் எனக்குப் புலப்படவில்லை."

"பாக்டாட் காலிப்களின் சிறந்த குணங்களும் அவர்கள் தார்த்தரி, ட்யூநிஸ், ஆல்ஜியர்ஸ், மொராக்கோ இந்நாடுகளிலிருக்கும் முரட்டு ஜாதியார்களெல்லோரையும் உண்மையான ஒரேகடவுளை வழிபடும்படிச் செய்ததும் யாவும் பாராட்டற்பாலன. அவர்களைப்போல மதாபிமான விஷயமாய் உழைத்தவர்கள் வெகு சிலரே. இருந்தாலும், இந்தியா, சைனா இந்த ஜனநெருக்கமான தேசங்களில் முஹம்மது அவதரிப்பதற்கு முன்னரே உத்தமமான மதங்களை ஆராய்ந்தறிந்து பல்லாயிர வருஷங்களாக அம்மதங்களை அநுஸரித்து வருகிறார்கள். நண்பரே, யோ

சித்துப் பார்த்தால் கடைசியில் அவர்களும் மகம்மதியர்களைப்போல் உண்மையான பரம்பொருளைக் கண்டறிய முயல்கிறார்கள். முடிவில் இரண்டு மதங்களின் லக்ஷயங்களும் நோக்கங்களும் ஒன்றே. முக்யமான விஷயத்தில் பேதமில்லாமலிருக்கையில், அவர்கள் எவ்வழி சென்றாலென்ன? எந்தப் பாஷை பேசினாலென்ன? எவ்விதம் சென்றாலும் கடைசியில் மகம்மதியர் செல்லுமிடத்தேதான் அவர்களும் வந்துசேர்வார்கள். நமது சக்ரவர்த்தியவர்களுடைய நோக்கம், கூடியமட்டும் இருதிரத்தாரையும் ஒன்று சேர்ப்பதுதான்."

"ஆனால் நமது சக்ரவர்த்தியின் முன்னோர்கள் வேறுவிதமாய் ஒன்றுபடுத்த முயன்றனர். முன் காலத்துக் காலிப்கள் ஐரோப்பா கண்டத்தில்கூட உண்மை மதத்தைப் போதித்தனர். ஐந்நூறு வருஷகாலம் இஸ்லாம் மதம் ஸ்பெயின் நாட்டில் பரவியிருந்தது. அவர்களுடைய நோக்கத்தின் பெருமையென்ன? அதன் ப்ரதாபமென்ன? அவற்றுடன் கொண்டு ஒப்பிடப்போகிறீர்களே நமது சக்ரவர்த்தியவர்களின் நோக்கங்களை!"

"நண்பரே, ஸ்பெயின் தேசத்தைப்பற்றிப் பேசினீரே. இப்போது இஸ்லாம் கொடி அங்கு பறக்கின்றதா? அதன் காரணமென்ன? ஸ்பெயினிலிருந்த ஸராஸன் ஜாதியார்கள், வல்லமையில் என்ன இளைத்தவர்களா? தொகையில் குறைந்தவர்களா? அவர்கள் ஐரோப்பாவில் எத்தனையோ அரண்மனைகள் கட்டினர்; எத்தனையோ கலாசாலைகள் ஏற்படுத்தினர்; ஐரோப்பியர்களுக்கு முதன் முதலில் கல்வி போதித்தனர்; ஐரோப்பிய நாகரிக ஆரம்பத்துக்கு அவர்கள்தான் காரணம். இருந்தும் அவர்கள் கதி என்ன வாயிற்று? அவர்களுக்கு அடங்கியிருந்த கிறிஸ்தவர்களுக்கும் அவர்களுக்கும் ஒத்துக்கொள்ளவில்லை. கிறிஸ்தவமதத்துக்கும் இஸ்லாம் மதத்துக்கும் பொருத்தமில்லாமல் போயிற்று. எப்போது குடிகள் அவலம்பிக்கவில்லையோ அப்போதே அந்த மதம் க்ஷீணிக்கத் தொடங்கியது. குடிகள் அத்ருப்தியடைந்தால் ராஜ்யம் நிலைக்குமா?

நமது பெருமை வாய்ந்த சக்ரவர்த்தியவர்கள் குடிகளை த்ருப்திசெய்து அவர்களுடைய அன்பாகிய அழியா அஸ்திவாரத்தின்மீது தமது ராஜ்யத்தைச் சாஸ்வதமாய் நிலைநிறுத்த ப்ரயத்னப்படுகிறார்."

"ஸ்பெயினைவிட்டு ஸராஸன்கள் போய்விட்டதால் இதர மகம்மதியர்கள் அவர்களுடைய ஸ்தானத்தை யெடுத்துக் கொண்டனர். இப்போது ஐரோப்பாவில் இஸ்லாம் பூண்டறுந்து போயிற்றோ? நமது சக்ரவர்த்தி ஸிம்ஹாஸனத்துக்கு வருவதற்கு நூறு வருஷத்துக்குமுன் ஓர் இஸ்லாம் தலைவர், கிறிஸ்தவர்கள் தலை நகராகிய கான்ஸ்டாண்டிநோபிலைப் பிடித்துக்கொண்டார். இப்போது அவருடைய ஸந்ததியார்கள் ஐரோப்பா கண்டத்துள் வெகுதூரம் சென்றிருக்கின்றனர்."

"ஐரோப்பாவில் பலபாகங்களைக் கைப்பற்றிய அந்த இஸ்லாம் வீரர்களுக்குக் கடவுள் க்ருபையால் இன்னும் ஜயம் உண்டாக வேண்டும். அவர்களுடைய பராக்ரமம் சொல்லத் திறமன்று. எனக்கு ராஜாங்க விஷயங்களில் ஏதோ அற்ப அநுபவம் இருக்கிறது. அயல் நாட்டுச் சரித்ரங்களையும் சிறிது படித்திருக்கிறேன். அநுபவத்தின்பேரில் நான் சொல்லும் வார்த்தையைச் சற்றுப் பொறுத்துக்கேட்க வேண்டும். கேவலம் அமர்க்களத்தில் வெற்றிதரும் பராக்ரமும் வீரமுமே ராஜ்யத்தை நிலை நிறுத்திவிடாது. துருக்கியர்கள் நல்ல சூரர்கள்தான். இருந்தாலும் இப்போதுகூட ஐரோப்பாவில் அவர்களுடையராஜ்யம் வலிவாயில்லை. சிறிது சிறிது தள்ளாடிக்கொண்டுதானிருக்கிறது. வருங்காலத்தில் எப்போதாவது ஒருவேளை துருக்கியர்கள் தமது மூடராஜாங்கத்தைக் கண்டறிந்து அதனைச் சீர்திருத்தித் தமது கீழிருக்கும் கிறிஸ்தவ ப்ரஜைகளை ஸமாதானப்படுத்தி அவர்களுடைய அன்பைப்பெற்று ராஜ்யத்தைப் பலப்படுத்தினாலும் படுத்தக்கூடும்."

இதைக்கேட்டவுடன் படோனிக்கு ஆத்ரம் அஸாத்யமாய் உண்டாய்விட்டது. "அபுல்பாஸல், உண்மை மதத்தினர்கள் ஒருபோதும் நாஸ்திகர்களுடன் ஸமாதானத்துக்கு வரமாட்டார்கள்" என்று அவர் கோபத்துடன் கூறினர்.

"உண்மை மதத்தினர்கள் ஒருபோதும்

இதர மதத்தினர்களை நிர்பந்திக்கவாவது ஹிம்ஸிக்கவாவது மாட்டார்கள். அரசர்கள் ஜனங்களுடைய ப்ரதிநிதி. ஆதலால் அவர்கள் குடிகளின் விருப்பத்துக் கிணங்கித்தான் நடக்கவேண்டும்” என்று சாந்தமாய் விடையளித்தார் அபுல்பாஸல்.

படோனி சற்றுநேரம் வாய்திறவாமலிருந்தார். மதவைரிகள் தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்னும் ஸித்தாந்தத்தை ஒருபோதும் விடமாட்டார்கள். நமது சரித்ராசிரியர், ஒருவர்க்குப் பயந்து வாயைமூடும் ஸ்வபாவ முடையவரல்லர். தமக்குத் தோன்றியதை அஞ்சாமல் சக்ரவர்த்திமுன்னிலையிலும்வெளியிட்டுவிடுவார்.

“ஐம்பது வருஷகாலமாக நீர் ராஜாங்கத்தில் உழைத்து வருகிறீர். அதனால் உங்களுக்கு எவ்வளவோ அநுபவங்கள் உண்டாயிருக்கலாம். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. இருந்தாலும் தங்களுடைய வார்த்தைக்கு விடையளிக்காவிட்டால் நான் இஸ்லாம் மதத்துக்கே த்ரோஹம் புரிந்தவனாவேன். உண்மை மதத்தினர்கள், ஒருபோதும் புறஸமயத்தாருடன் சாஸ்த்ர விரோதமான ஸமாதானம் செய்து கொள்வதில்லை என்பது திண்ணம். உமது நூதன கதம்ப மதக்கோட்பாடுகள் கனவுபோல் மறைந்துவிட்ட பின்னர், இஸ்லாம் மதம் இந்தியாவில் வெற்றிபெற்று வேரூன்றும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.”

“அப்படியே யாகட்டுமே, படோனி, தற்காலத்தில் தமது எளிய குடிகளிலிருந்து கோடிக்கணக்கான ஜனங்களுக்கு ஸர்வேஸ்வரனைப்பற்றிய உண்மையைப் போதிக்கும் மஹான்கள் செல்லும் வழியே அடியேனும் சக்ரவர்த்தியவர்களுடைய ஸம்மதத்தின்பேரில் சென்றேன் என்பதே எனக்கு ஒரு பெருமை. அவ்வளவு பெயர் எனக்குப் போதும். நமது கடமையை நாம்செய்துவிட்டால் அப்புறம் அது பகவானுடைய பொறுப்பு, அது செழிப்பதும் க்ஷீணிப்பதும். அதைப்பற்றி நாம் என் கவலைப்படவேண்டும்?”

“இஸ்லாம் ராஜ்யம் நிலைபெற்றிருப்பது நாஸ்திகர்களுடைய போதனைகளாலன்று. உண்மை மதத்தினர் கைப்பிடித்த கத்தியால் அது தினைதினை வ்ருத்தியடைந்து வருகிறது. எனக்கும் சிறிது உலக சரித்ரம் தெரியும். அதன் மூலமாய் ராஜாங்க விஷயங்களையும் கொஞ்சங் கொஞ்சம் அறிவேன். சக்ரவர்த்தியவர்களுடைய ராஜாங்க வழிக்கும் அவரது முன்னோர்களாகிய முஹம்மது கஜினி முதலிய மகம்மதிய அரசர்களுடைய ராஜாங்க வழிக்கும் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லை. தன் முன்னோர்களெல்லாம் மூடரென நினைத்து நமது சக்ரவர்த்தி ஒரு நூதனவழியில் செல்கிறார். இவருடைய நூதன மார்க்கம் இவருடனே முடிவுபெறும்; இவருடைய ஸந்ததியாரெவரும் இவருடைய மார்க்கத்தைப் பின்பற்றமாட்டார்கள். முஸல்மான் என்பவனுக்கு அடுத்ததா இவர் மார்க்கம்? இவருடைய ஸந்ததியார்கள் ஹிந்துக்களை நிர்ப்பந்தித்து அவர்களுக்கு இஸ்லாம் மதத்தைக் கற்பித்து ராஜ்யத்தைக் கத்திகட்டாரி பலத்தால் செவ்வெனப் பரிபாலித்து வருவார்கள். இதர முஸல்மான் தேசங்களைப் பார். நமது நாட்டைப்போல் மானக்கேடான ஸ்திதியில் ஒன்றாவது இருக்கிறதா? அக்பருடைய உபாயம் பயன்படாதென்று உணர்ந்து அவர்கள் தமது ராஜ்யங்களை ஸைந்யபலத்தால் ஆட்சி செய்து வருகிறார்கள். கொஞ்சகாலத்துக்குள் இந்தியாவும் அத்தகைய நாடுகளில் ஒன்றாக விளங்கும் என்பது நிச்சயம்.”

இம்மொழிகள் சக்ரவர்த்திக்குப் படவேண்டுமென்று பேசப்பட்டவை; படோனிக்கு வரவர கோபமும் ஆத்ரமும் அதிகரித்துவிட்டது. ஆனால் இம்மாதிரி விவாதங்களில் பண்டிதர்கள் தமக்கு யுக்தமெனத் தோன்றியதையெல்லாம் பயமின்றிப் பேசலாம். அக்பர் கோபங்கொள்வதில்லை. இவ்வித வாதுகளைக் கேட்பதில் அவருக்கு வெகு ப்ரியம். அபுல்பாஸல் பதிலொன்றும் உரைக்கவில்லை. அக்பர் படோனியைப் பார்த்துச் சொல்லலானார்.

“படோனி, நீர் சொல்கிறபடி எனது ஸந்ததியார் ப்ரஜைகளை த்ருப்திசெய்து அவர்களுடைய அன்பைப்பெற்று அரசாளுவதை யொழித்துக் கேவலம் கத்திகட்டாரி பலத்தினால் அரசாண்டு விடலாமென்று யோசித்து அவ்வாறு செய்யினும் செய்வர்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

கிராமங்களில் சுகாதாரப் பிரசங்கங்கள்.—தேக சௌக்யத்துடன் இருக்கவேண்டுமாயின், சுகாதாரத்தின் நன்மைகளையும், சுகாதாரக் குறைவினால் உண்டாகும் தீமைகளையும், சுகாதாரம் சீர்கெடாமல் இருப்பதற்கான வழிகளையும் அறியவேண்டியதவசியம். ஆகவே, ஆகாரம், ஜலம், க்ஷயரோகம், மலேரியா, கால்ரா, வைசூரி, பிளேக், குழந்தைகளை வளர்த்தல், சுத்தமாயிருத்தல், தேகாப்பியாசம், வீடுகட்டுதல் முதலிய பல விஷயங்களைப்பற்றிக் கிராமவாசிகளுக்குப் பிரசங்கமூலமாய் எடுத்துச்சொல்ல, நமது கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்யப் போகிறார்கள். ஷை பிரசங்கங்கள் தேசபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு யாவர்க்கும் கொடுக்கப்படும். சுகாதார இலாகா, கல்வி இலாகாமுதலிய இலாகாக்களின் உத்தியோகஸ்தர்களின் மூலமாகவும் இன்னும் பொதுஜன நன்மையில் சிரத்தையுள்ள உத்தியோகஸ்தர்கள், உத்தியோகஸ்தரல்லாதவர்கள் ஆகிய இவர்கள் மூலமாயும் அப்பிரசங்கங்கள் நடத்தப்படும். விஷயங்களை நன்கு அறிவிக்கும்படியான லாந்தர் படங்களும் தயாராகி வருகின்றன.

***

கராச்சியில் வியாபாரக் குறைவு.—1915-ம் ௵ டிஸம்பர் மாதத்தில் 138 லக்ஷம் ரூபாய்க்கு வியாபாரம் நடந்திருக்கிறது. 1914-ம் வருஷத்தில் 254 லக்ஷம் ரூபாய்க்கு வியாபாரம் நடந்திருந்தது. இறக்குமதி 129 லக்ஷத்திலிருந்து 62 லக்ஷத்திற்கும், ஏற்றுமதி 125 லக்ஷத்திலிருந்து 65 லக்ஷத்திற்கும் குறைந்திருக்கிறது.

***

மலேரியாஜ்வரத்தைத் தடுக்கயோசனைகள்.—மலேரியா ஜ்வரம் உண்டாவதற்குக் கொசுக்களே காரணமென்றும், அநாவசியமான ஜலத்தேக்கங்களையும், உபயோகமற்ற கிணறுகளையும், குட்டைகளையும் மூடிவிடுவதே நலமென்று இந்நகரிலுள்ள மேஜர் ராஸ் என்பவரும், மற்றொரு டாக்டரான ரெவரெண்ட் மூயர் என்பவர், மலேரியாவைப் போக்க ஒவ்வொருவரும் கிரமமாகக் கொயினாவைச் சாப்பிடவேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். கொயினா சாப்பிடுவதில் பலன் உண்டென்றாலும், சில சமயங்களில் தீங்குகளும் சம்பவிக்கின்றன.

***

அஸிஸ் உடீன் இனாம் புத்தகாலயம்.—இப்பெயர் கொண்ட புத்தகாலயம் ஒன்று, கூடலூரில் இம்மாதத்தில் ஷை ஊர் ஜில்லா கலெக்டரான கான்பஹதூர் அஜிஸ் உடீன் ஸாகிப்பால் திறந்துவைக்கப்பட்டது. ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ள புஸ்தகங்கள் இதில் வாங்கிவைத்திருப்பதுடன், முக்கியமான பத்திரிகைகளும் பொது ஜனங்களால் தருவித்துக்கொடுக்கப்பட்டு வருகின்றன. இம்மாதிரி ஒவ்வொரு ஊரிலும் ஏற்பட்டால் ஜனங்கள் மிகவும் பயனடைவார்கள்.

***

டிரான்ஸ்வாலில் தங்கம்.—1915ம்வருஷத்தில் ட்ரான்ஸ்வாலில் 3,86,27,461-பவுன் பொறுமானமுள்ள தங்கம் எடுக்கப்பட்டது. அதற்கு முந்திய வருஷத்தைக் காட்டிலும், இவ்வருஷம் 30,39,306,-பவுன் அதிகமாகக் கிடைத்திருக்கிறது.

***

நமது புதிய ராஜப்பிரதிநிதி.—லார்ட் ஹார்டிஞ்சுக்குப் பதிலாக நியமனம் பெற்றிருக்கும் லார்ட் சேமஸ்போர்ட் தம் பரிவாரங்களுடன் அடுத்த ஏப்ரல் மாதம் வருகிறார். இச்சஞ்சிகையில், அவர், அவருடைய தம்பதி ஆகிய இருவருடைய படங்களையும் அனுபந்தமாகச் சேர்த்திருக்கிறோம்.

***

மரக்கூழ்.—சரக்குகளைச்சேர்த்து ரஸாயன முறைப்படி ஸ்வீடன் தேசத்தில் செய்யப்படும் மரக்கூழை ஏற்றுமதி செய்யக்கூடாதென்று அத்தேச கவர்ன்மெண்டார் தடுத்திருப்பதால், பெரிய காகிதப் பஞ்சம் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நள வருஷ சித்திரைமீ CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | தலு | இங் | தமிழ் | வார | நள வருஷ சித்திரைமீ { சாலிசகம் 1838 கலியப்தம் 5017 பசலி 1325 கோல்லம்-1091 { ஹிஜரி 1334 } 1916 வருஷ ஏப்பிரல்மீ-மேமீ |
|---|---|---|---|---|---|
| | 9 | 13 | 1 | வியா | தச 13-31, ஆயி 10-44, சூல 8-22, கர 13-31- ரா 12-2, அக-30-35. மே சு ஏகாதிதி ஸமார்கம் புதுக்கணக்குப் |
| பு | 10 | 14 | 2 | வெ | ஏகா 15-42, மக 14-35, கண் 7-41, பத் 15-42, ரா 4-50 அசு-4, புத 47-4, துவாதிதி சர்வ ஏகா [போடஉத்தமம் |
| சு | 11 | 15 | 3 | சனி | துவா 16-50, பூர 17-13 விர் 6-2, பா 16-50, ரா 4-58, ரோ 3 சுக் 59-40, சனிப்பிரதோ மனத்திரயோ |
| ர செ | 12 | 16 | 4 | ஞா | திர 16-35, உத் 18-36, துரு 3-24. வியா 56-28, தை 16-35, ரா 8-59, அசு-2, ரவி 3-26, ஆயி 2, செ 8-48, பர 1- புத 45-30, தமனசதுர்த்தசி |
| பு] | 13 | 17 | 5 | திங் | சது 15-5, அஸ் 18-45, ஹர் 55-14, வணி 15-5, ரா 8-46, அக 30-42, பச்சாதுதயபுத 26-10, |
| புசு | 14 | 18 | 6 | செ | ◯ பௌ 12-28, சித் 17-49, வஜ் 49-44- பவ 12-28, ரா 0-40, பர 2, புத 54-30, ரோ 4, சுக் 58-30, சித்திரா பூர்ணிமா ரௌச்சம வைஸ்ரா இஷ்டி கரிநாள் |
| ர | 15 | 19 | 7 | புத | பிர 8-51, சுவா 15-55, சித் 43-35, கௌ 8-51, திவி 26-17, சைத் பகு அசு 3, ரவி 28-43, மழை 7-க்குள் |
| பு | 16 | 20 | 8 | வியா | துதி 4-26, திரு 54-54, விசா 13-14, விய 36-51 கர 4-26, திவி 22-41, ரிஷபாய 3-16, பர 3, புத 52-25, விய சிரா |
| கு | 17 | 21 | 9 | வெ | சது 53-39, அனு 9-54, வரி 29-41, பவ 26-29, திவி 23-1, அக 30-48, ரே 3, குரு 58-38, பிராகுதயகுரு 14-9, சங் சது |
| ரபுசு | 18 | 22 | 10 | சனி | பஞ் 47-42, கேட் 6-7, பரி 22-13 கௌ 20-40, திவி 24-43, ரா 27-8, அசு-4 ரவி 53-56, பர 4, புத 57-20, மிரு [1, சுக் 8-11, |
| | 19 | 23 | 11 | ஞா | சஷ் 41-31, மூல 1-56, பூரா 55-53, சிவ 14-28, கர 14-36, சே 1-56, திவி 24-17, தாபவிசேஷம் |
| பு | 20 | 24 | 12 | திங் | சப் 35-44 உத்தி 53-59, சித் 6-58, சா 52-28, பத் 8-37, திவி 15-15, கார் 1, புத 60-0, காளாஷ்டமி(2கே 30-5 சிர உப |
| சுரா | 21 | 25 | 13 | செ | அஷ் 30-9, திரு 50-28, சுப 52-19, பா 2-56, திவி 3-34, ரா 29-5, அக 30-53, மிரு 2 சுக் 20-0, உத் 4 ரா பூச |
| ரபு | 22 | 26 | 14 | புத | நவ 25-2, அவி 47-27, சுப் 45-38, கர 25-2, சே 3-58, பர 1 ரவி 19-46, ரிஷப புத 53-20, நவமிதிதி வராஹ- |
| செ | 23 | 27 | 15 | வியா | தச 20-33 சத 45-8, பிரா 39-31 பத் 10-33, திவி 4-45, ஆயி 3, செ 38-0, திதித்வயம் கரிநாள் [ஸர்வ ஏகா |
| புசு | 24 | 28 | 16 | வெ | ஏகா 16-52, பூரட் 43-44, மா 34-8, பா 16-52, திவி 0-46, கார் 3, புத 56-40, மிதுன சுக் 30-25, துவாதிதி சர்வ |
| ர | 25 | 29 | 17 | சனி | துவா 14-12, உத்தி 43-24, வை 29-36, தை 14-12, திவி 7-36 அக 30-58, பர 2, ரவி 45-57, வை சிரா சனிப்பிரதோ |
| | 26 | 30 | 18 | ஞா | திர 12-40, ரேவ 44-16, விஷ் 26-1, வணி 12-40, திவி 13-50, மா சி பிரவாகமேகோத்பத்தி |
| புசு | 27 | 1 | 19 | திங் | சது 12-5, அசு 46-3, பிரி 23-9, சகு 12-5, ரா 4-45, கார் 4, புத 1-43, மிரு 4, சுக் 55-19, சர்வ அமா கல்பாதி |
| | 28 | 2 | 20 | செ | ● அமா 13-24, பர 49-41, ஆயு 21-50, நா 13-24, திவி 11-30, பிண்டபிய இஷ்டி |
| ர | 29 | 3 | 21 | புத | பிர 15-40 ✳ கார் 54-8, ஸௌ 21-12, பவ 15-40, திவி 21-54, அக 31-3, வை சுத் பர 3, ரவி 12-23 துதியாதிதி சங் தரி கார் உப [மழை 5-க்குள் |
| பு | 1 | 4 | 22 | வியா | துதி 19-1, ரோ 59-32 சோ 21-24, கௌ 19-1, ரா 6-40, ரோ 1, புத 52-34, திருதியாதிதி |
| சு | 2 | 5 | 23 | வெ | திரு 23-17, மிரு 60-0, அதி 22-19, கர 23-17, திவி 15-0, திரு 1 சுக் 18-40 அதிதி பரசு ஜ-திரேவாயு அக்ஷயதிருதியா |
| ரசெ புகு] | 3 | 6 | 24 | சனி | சது 28-7, மிரு 5-48, சுக 23-40, பத் 28-7- திவி 29-2, பர 4, ரவி 40-0, ஆயி 4, செ 55-0 ரோ 2, புத 43-8, ரே 4; குரு 49-0, சதுர்திதி சது விரு லாவண்யகௌரீ அக்கினிநக்ஷத்திராரம்பம் 40-0 |
| சு | 4 | 7 | 25 | ஞா | பஞ் 33-5, திரு 12-12, திரு 25-9, பவ 0-36, ரா 14-14, அக 31-7, திரு 4, ரிசு சனி 60-0, ஸ்ரீகுருசங்கர ஜ |
| சு | 5 | 8 | 26 | திங் | சஷ் 37-52, புன 18-30, சூல 26-30, கௌ 5-28, ரா 9-21, திரு 2, சுக் 43-26, சஷ்டி உப |
| | 6 | 9 | 27 | செ | சப் 42-7, பூச 24-23, கண் 27-30, கர 9-59, ரா 27-58, சப் விரு இடிமின்னல் 9-க்குள் |
| ரபு | 7 | 10 | 28 | புத | அஷ் 45-32, ஆயி 29-33, விர் 27-54, பத் 13-49, சே 3-8, கார் 1, ரவி 7-37, ரோ 3, புத 43-8 |
| | 8 | 11 | 29 | வியா | நவ 47-46, மக 33-39. துரு 27-28, பா 16-39, திவி 1-36, ரா 23-26, அக 31-11 மழை 3-க்குள் |
| சு | 9 | 12 | 30 | வெ | தச 48-45, பூர 36-32, வியா 26-2. தை 18-15, ரா 23-52, திரு 3, சுக் 28-42, தசமிதிதி |
| ர | 10 | 13 | 31 | சனி | ஏகா 48-32, உத்தி 38-14 ஹர் 23-43, வணி 18-38, ரா 28-11, ரிஷபரவி 34-42, சூன்யதிதி சர்வ ஏகா விஷ்ணுபதி |

| குரு | ரவி புத | சுக் | சனி |
|---|---|---|---|
| | 14 ரிஷ புத 16 | | செ கேது |
| ராகு | மிது சுக் | | |
| | | | |

A. 963

## Aletris cordial

## அல்லெட்ரிஸ் கார்டியல்

### ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கும் உபயோகிக்கப்படுவது. ருது அடைய நிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்தே மிகவும் சிறந்தது.

அளவு:—தேயிலைக் கரண்டி மருந்தை, உண்டபின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ண உதகத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

## Celerina

## ஸிலரீனா

### பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும், ஒரு மணி முன்பு, ஒரு தேயிலைக் கரண்டியளவு நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத் தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக் கேட்டாலாகும் அஜீர்ணம், பல ஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவையாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தியடைய மிக்க அருமையாகச் செய்யப்பட்டது.

இப்பிரஸித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறுமல்

**RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.**

என்ற லேபிளைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளிலெங்கும் கிடைக்கும்.

# ஏது மேலானது?

## விருத்த வைத்தியம்

### ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

சரீர சம்பந்தமான சகல ரோகங்களையும் குணப்படுத்துகிற திவ்யமருந்து. தேக சக்திக்கும் மனோ சக்திக்கும் இதுதான் சிறந்தது. அஜீரணம் விரிய ரோகம் இவைகளைக் குணப்படுத்துவதில் மிகவும் கீர்த்தி பெற்றது. தெய்வானுக்ரஹம் பெற்றது.

32, மாத்திரைக்கு விலை ரூ. 1

பம்பாய் ராஜதானியில் மிகப் பெரிதும் பழமையுமானது. 1881ம் வருஷம் கத்தியவார் ஜில்லாவிலுள்ள ஜாம் நகரில் ஸ்தாபிக்கப் பட்டது. இந்த ஔஷதாலயத்தில் வைத்திய பாரங்கதரும் வித்யாபட்டம் பெற்றவரும் சாஸ்திர வித்பன்னர்களும் வேலை செய்கிறார்கள்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜி
ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்
157, பிராட்வே, மதராஸ்.

### மணி ஆயில்

பரிமள மிகுந்தவாசனைத்தைலம். தற்காலத்தில் வெளி வந்துலாவும் தைலங்களைப்போல் கருதிவிடக்கூடாது. சாஸ்திர முறைப்படி செய்யப்பட்டிருக்கிறது. மூளையைக் குளிரச்செய்து ரோமங்களை உதிராமற்றடுத்து பளபளப்பாயும் மிருதுவாயும் நீண்டு வளரச்செய்கிறது.

புட்டி 1-க்கு விலை ரூ. 1

314




## பாலாஜி அண்டு கம்பெனி, காசி

புதுசரக்குகள், உடனே எழுதுங்கள். சகாயவிலைகள்

### புதுமாதிரி பட்டுசேலைகள்

நாகரீக ஸ்திரீகளுக்கு தக்க புதுமாதிரிசேலைகள். புதுகலர்கள். சொகுசான பட்டுகள். 25 முதல் 100 வரை.

### பட்டு ரவிக்கைகள்.

மடி சேலைகளுக்கு தக்கவை, 1க்கு ரூ 2-8-0-முதல் ரூ 5 வரை.

### விளையாட்டு சாமான்கள்

குழந்தைகளுக்கு இது சந்தோஷமும், உச்சாகமும், தரும். பிரதி விட்டிலும் இருக்க வேண்டியது. 32 சாமான்கள் அடங்கிய,

பெரிய செட்டு 1க்கு ரூ 3—8—0
சின்ன செ டு 1க்கு " 1—12-0

காட்லாக்கு இனம்,

**BALAJEE & CO., SILK MERCHANTS,**

***Benares City.***

---

**The Great European War**

WRITTEN IN LUCID TAMIL

**Pages 256 : : 58 Fine Half-tone Illustrations**

**Price Re. 1-4.**

In this book are given a short history of Europe, the causes that led to the War, the progress of the War, short sketches of the Emperors, Generals, etc., A good description of the modern machinery used in land, air and sea, by means of 58 beautiful illustrations printed on art paper. The only good edltion : For copies apply sharp to:

THE MANAGER,

"VIVEKA BODHINI,"

Triplicane, Madras, S. E.

**ஐரோப்பிய மஹா யுத்தம்**

சென்ற இரண்டு வருஷகாலமாக மிகவும் கோரமாய் நடைபெற்றுவரும் ஐரோப்பிய மஹாயுத்தத்திற்கு ஏற்பட்ட காரணங்கள், ஐரோப்பிய தேச சரித்திர ஸம்பந்தமான பல விஷயங்கள், இந்த யுத்தத்தில் ஸம்பந்தப்பட்ட மன்னர்கள், ஸேனாதிபதிகள், பயங்கரமான யுத்தாயுதங்கள் முதலியவைகளின் விவரங்கள், தெளிவாயும், கதைப்போக்காயும் ஸாமான்ய ஜனங்கள் கூட எளிதில் படித்தறிந்து கொள்ளும்படி எழுதப்பெற்றிருக்கிறது.

256-பக்கங்கள் :: 58-ஆப்டோன் படங்கள், கண்ணைக்கவரும் விதம் அச்சிடப்பெற்றது.

மிகவும் சிறந்த பதிப்பு. விலை ரூ. 1—4.

மானேஜர், விவேக போதினி,

திருவல்லிக்கேணி, சென்னை.